


வாராந்த மின்னிதழ்

உண்மையின் முகம்

# கல்முனை NET

kalmunainet.com

e paper






தமிழ் மொழியினருக்கான தகவல் தளம்

பிலவ வருடம் ஐப்பசி 13 (30.10.2021) இதழ் : 37

# ஞானசார தேரர் நீக்கப்பட வேண்டும்



## ரெலோ தலைவர் அடைக்கலநாதன் ஆவேசம்

(அலுவலக செய்தியாளர்)

ஒரே நாடு, ஒரே சட்டத்துக்கான ஜனாதிபதி செயலணி மீள கட்டமைக்கப்பட வேண்டும், இதில் இருந்து ஞானசார தேரர் நீக்கப்பட வேண்டும் என்று ரெலோ கட்சியின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன் எம். பி தெரிவித்தார்.

கல்முனைநெற் இவரை நேற்று வெள்ளிக்கிழமை தொடர்பு கொண்டு பேசியபோது;

ஞானசார தேரர் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட குற்றவாளி ஆவார். ஆனால் ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் வெளியில் வந்தார். சட்டத்தால் தண்டிக்கப்பட்ட ஒருவரின் தலைமையில் சட்டத்தை 02

## ஞானசாரர் தலைமையிலான செயலணி பிசுபிசுத்து போகும்

### செயலணி முஸ்லிம்களுக்கு நேரடி எச்சரிக்கை; தமிழர்கள் நிராகரிக்கப்பட்டதையும் கண்டிக்கிறோம்



(தர்மேந்திரா)

ஒரே நாடு ஒரே சட்டத்துக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவராக ஞானசார தேரரை ஜனாதிபதி கோதாபய ராஜபக்ஷ நியமித்து இருப்பது சிறுபான்மை சமூகங்களுக்கு அவரால் விடுக்கப்பட்டு உள்ள அச்சுறுத்தலுடன் கூடிய வலிமையான எச்சரிக்கையாகவே தெரிகிறது என்று ஐக்கிய சமாதான கூட்டமைப்பின் செயலாளர் நாயகமும், சுகாதார மற்றும் போசாக்கு துறை முன்னாள் இராஜாங்க அமைச்சருமான எம். ரி. ஹசன் அலி தெரிவித்தார்.

இவரின் நிந்தவூர் இல்லத்தில் ஆதரவாளர்களை நேற்று வெள்ளிக்கிழமை காலை சந்தித்து இது தொடர்பாக பேசிய போது ஹசன் அலி மேலும் தெரிவித்தவை வருமாறு:

ஞானசார தேரர் என்கிற 02

## பொறுப்பை முறையாக செய்வேன்



### ஒரே சட்டத்தை அமுல் செய்வது அடர்ந்த காட்டை சுத்தம் செய்வதற்கு சமம்

நாட்டில் ஒரே சட்டத்தை நடைமுறைப்படுத்துவது என்பது அடர்ந்த காட்டை சுத்தம் செய்வது போல் ஆகும் என்று ஒரே நாடு ஒரே சட்டத்துக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவர் ஞானசார தேரர் தெரிவித்தார்.

இவர் புதிய தலைமை பொறுப்பு தொடர்பாக நேற்று ஊடகங்களுக்கு தெரிவித்தபோது, 'நான் எனது தலைமைத்துவத்தை முறையாக மேற்கொள்வேன், கடமைகளை சரியாக செய்வேன், இது எதிர்பார்த்த ஒன்றுதான், நாட்டில் ஒரு சட்டத்தை நடைமுறைப்படுத்துவது என்பது அடர்ந்த காட்டை சுத்தம் செய்வது போல் ஆகும்' என்றார்.

இதே நேரம், செயலணி உறுப்பினர்களில் ஒருவரான பேராசிரியர் நந்தன விஜேசிங்க கருத்து 07

## மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடு 31 முதல் நீக்கம்

### பொது இடங்களுக்குச் செல்ல தடுப்பூசி அட்டை தேவை

### O/L, A/L கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிக்க தீர்மானம்

நாட்டில் அமுலில் இருக்கும் மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடுகளை, ஒக்டோபர் மாதம் 31ஆம் திகதி அதிகாலை 4.00 மணிக்கு நீக்கத் தீர்மானிக்கப்பட்டது.

புதிய பொதுமைப்படுத்தலின் கீழ், பொது மக்களின் வாழ்க்கை முறைமை பாதிக்காத வகையில் முன்னெடுக்கப்பட வேண்டுமென்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டே, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதென, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.

வீடியோ தொழில்நுட்பத்தின் ஊடாக நேற்று (29) முற்பகல் இடம்பெற்ற கொவிட் தொற்றொழிப்புச் 02

## டக்ளஸ், செந்தில் கடும் ஆட்சேபனை

### ஒரே நாடு, ஒரே சட்டம் செயலணி விஸ்தரிப்பு

(அலுவலக செய்தியாளர்)

தமிழர் பிரதிநிதிகளை உள்ளீர்ப்பதற்கு ஏற்ற வகையில் ஒரே நாடு; ஒரே சட்டத்துக்கான ஜனாதிபதி செயலணியை விஸ்தரிக்குமாறு ஜனாதிபதியின் செயலாளருக்கு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ஷ அறிவுறுத்தியுள்ளார்.

ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பங்காளி கட்சி தலைவர்களை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடந்த வியாழக்கிழமை மாலை அலரி மாளிகையில் சந்தித்து பேசினார்.

இதன்போது ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும், கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் உப தலைவரும், ஊவா மாகாண முன்னாள் முதலமைச்சருமான செந்தில் தொண்டமான் ஆகியோர், ஒரே நாடு ஒரே சட்டத்துக்கான ஜனாதிபதி செயலணிக்கு தமிழர் பிரதிநிதிகள் ஜனாதிபதியால் நியமிக்கப்படாததை வன்மையாக கண்டித்து ஆட்சேபித்தனர்.

ஒரே நாடு ஒரே சட்டம் என்கிற கோட்பாடு தேசிய முக்கியத்துவம் வாய்ந்த 07

## தோட்ட தொழிலாளர் சம்பள விவகாரம்; செந்தில் தொண்டமான் காரசாரம்

### 1000 ரூபாய் முழுமையாக கிடைக்க ஜனாதிபதி நடவடிக்கை



(அலுவலக செய்தியாளர் )

தோட்ட தொழிலாளர்களுக்கான நாளாந்த சம்பளத்தை 1000 ரூபாயாக அதிகரித்து வெளியிடப்பட்ட வர்த்தமானி பிரகடனத்தை உடனடியாக முழுமையாக அமுலுக்கு கொண்டு வர உரிய நடவடிக்கை எடுப்பதாக, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார். இலங்கை தொழிலாளர் 07

## செயலணியில் எங்களுக்கு முற்றாக நம்பிக்கை இல்லை



ஞானசாரர் குழுவில் தமிழ் உறுப்பினர் இல்லை என சுட்டிக்காட்டியது, அதில் தமிழரை நியமியுங்கள் என்பதற்காக அல்ல. இக்குழுவில் எமக்கு நம்பிக்கை இல்லை என்பற்காகவே என்று மனோ கணேசன் எம். பி தெரிவித்தார்.

இவர் இது தொடர்பாக மேலும் தெரிவித்தவை வருமாறு 02

# பங்களாதேஷில் இந்துக்கள் மீது பயங்கரவாதம் கட்டவிழ்ப்பு

## நாடு முழுவதும் ஆன்ம சாந்தி பிரார்த்தனை



(காரைதீவு காந்தன்)

பங்காளதேஷில் நவராத்திரி தினத்தில் இந்துக்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட இஸ்லாமிய தீவிர வாதிகளின் தாக்குதலை கண்டித்து நேற்று வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணியளவில் நாடளாவிய ரீதியில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

கொல்லப்பட்ட அன்பர்களுக்காக இந்து அமைப்புகள், இந்து ஆலயங்கள் மற்றும் இந்து நிறுவனங்களின் கூட்டமைப்பின் ஏற்பட்டில் ஆலயங்களில் முன்னதாக ஆன்ம சாந்தி பிரார்த்தனைகள் மேற்கொள்ளப்பட்டன. தொடர்ந்து ஆலயங்கள் முன்பாக திரண்டு கோஷங்கள் எழுப்பினர்.

இதை தொடர்ந்து அமைப்பின் தேசிய அமைப்பாளர் சி. வரதநிரோசன் ஊடகங்களுக்கு தெரிவித்தவை வருமாறு:

உலகில் எங்காவது ஒரு மூலையில் இந்துக்களுக்கு துன்பம் ஏற்பட்டால் அது நமக்கு ஏற்பட்ட துன்பமாக கருத வேண்டும், அப்போது மட்டும்தான் நீ உண்மையான இந்து ஆவாய் என சுவாமி விவேகானந்தர் கூறினார்.

பங்களாதேஷில் 2013 ஆம் ஆண்டில் இருந்து இப்போது வரை 3 ஆயிரத்து 680 தாக்குதல்கள் இந்துக்கள் மீது நடத்தப்பட்டு உள்ளன. இந்நிலையில், கடந்த நவராத்திரி தினத்திலும் இஸ்லாமிய மத வெறியாளர்களால் கொலை வெறி தாக்குதல்கள் நடத்தப்பட்டு உள்ளன.

இவற்றில் சுவாமி நிதிதாஸ் பிரபு உட்பட 11 பேர் படுகொலை செய்யப்பட்டதுடன். 550 வீடுகள், 442 கடைகள், தீக்கிரையாக்கப்பட்டு 861 பேர் படுகாயம் அடைந்து உள்ளனர். பல பெண்கள் மான பங்கம் செய்யப்பட்டனர். இரு சக்தி பீடங்கள், இராம கிருஷ்ண மிஷன் அடங்கலாக 1608 இந்து மற்றும் பௌத்த ஆலயங்கள் உடைக்கப்பட்டன.

இவற்றை கண்டித்தே நாடளாவிய ரீதியில் இந்து ஆலயங்களுக்கு முன்னால் திரண்டு ஆர்ப்பாட்டம் செய்தோம். கொல்லப்பட்ட உறவுகளுக்காக முன்னதாக ஆலயங்களில் ஆன்ம சாந்தி பிரார்த்தனைகளும் மேற்கொண்டோம் என்றார்.

# சீனாவின் கறுப்பு பட்டியலில் இலங்கை மக்கள் வங்கி




சீனாவின் ஷிங்டாவ் சீவின் பயோடெக் குரூப் கம்பனி லிமிடெட் நிறுவனத்திடமிருந்து இறக்குமதி

செய்யப்பட்ட சேதன உரத்தில் 'எர்வீனியா' உள்ளிட்ட தீங்கேற்படுத்தும் நுண்ணுயிரிகள்அடங்கியுள்ளமை கண்டறியப்பட்ட நிலையில், அந்த உரத்தைத்திருப்பியனுப்புவதற்குநடவடிக்கைஎடுக்கப்பட்டது.

இந்நிலையில், இருதரப்பு ஒப்பந்தத்தை மீறி உர இறக்குமதி தொடர்பான கடன் கடிதத்திற்குரிய பணத்தை செலுத்தாமையினால் இலங்கை மக்கள் வங்கியை 'கறுப்புப்பட்டியலில்' இணைப்பதாக சீனத்தூதரகம் அறிவித்துள்ளது.

சீனத்தூதரகத்தின் அறிவிப்பையடுத்து, இவ்விடயத்தில் தமது நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தும் வகையில் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ள இலங்கை மக்கள் வங்கி,

குறித்த வர்த்தகக் கொடுக்கல், வாங்கல் தொடர்பில் கொழும்பு வர்த்தக மேல்நீதிமன்றத்தினால் பிறப்பிக்கப்பட்ட தடையுத்தரவிற்கு அமைவாகவே கடன் கடிதத்திற்குரிய பணத்தைச் செலுத்துவது தற்காலிகமாக இடைநிறுத்திவைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சீனத்தூதரகத்தின் அதிகாரிகளுக்குத் தெளிவுபடுத்தப்பட்டிருப்பதாகவும் அவ்வறிக்கையில் குறிப்பிட்டுள்ள மக்கள் வங்கி, இந்நாட்டின் பொறுப்புவாய்ந்த கட்டமைப்பு என்ற வகையில் நீதிமன்ற உத்தரவிற்கு அமைவாக செயற்படுகின்றமையினாலேயே உரிய கொடுப்பனவைச் செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

## ஞானசாரர் தலைமை...

பாத்திரம் சிறுபான்மை சமூகங்களுக்கு குறிப்பாக முஸ்லிம்களுக்கு நீண்ட காலமாக தொடர்ந்து அச்சத்தை ஏற்படுத்தி வருவதாக உள்ளது. அதே போல ஒரே நாடு ஒரே சட்டம் என்கிற கோட்பாடு சிறுபான்மை சமூகங்களுக்கு குறிப்பாக முஸ்லிம்களுக்கு அச்சத்தை ஏற்படுத்துவதாக இருக்கின்றது.

இந்நிலையில், ஒரே நாடு; ஒரே சட்டத்துக்கான ஜனாதிபதி செயலணியின் தலைவராக ஞானசார தேரரை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ நியமித்து இருப்பது சிறுபான்மை சமூகங்கள் மீது குறிப்பாக முஸ்லிம்கள் மீது அவரால் பிரயோகிக்கப்பட்டு உள்ள அச்சுறுத்தலுடன் கூடிய வலிமையான எச்சரிக்கையாகவே தெரிகிறது.

சக வாழ்வு, சகிப்பு தன்மை, காருண்யம், சகோதரத்துவம் உள்ளிட்ட மகோன்னதமான மாண்புகளை பற்றியே அதிகமாக பௌத்த சமயம் பேசுகின்றது. கல்வியில் உயர்ந்த, பண்பில் சிறந்த எத்தனையோ பௌத்த பிக்குகள் இருக்கின்றனர். அவர்களை எல்லாம் தவிர்த்து விட்டு ஞானசார தேரரை நியமித்து இருப்பது பாரிய நம்பிக்கையீனத்தை ஆரம்பத்திலேயே தந்து விட்டது.

ஒரே நாடு; ஒரே சட்டத்துக்கு ஜனாதிபதி செயலணி அமைக்கப்பட்டு இருப்பது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயம்தான். இதில் இந்நாட்டில் வாழ்கின்ற எல்லா இன மக்களினதும் பங்கும், பங்களிப்பும் அவசியம். அவ்வாறு இருக்க தமிழர் ஒருவர்கூட செயலணிக்கு நியமிக்கப்படவில்லை. தமிழர்கள் ஆரம்பத்திலேயே ஒதுக்கப்பட்டு விட்டனர்.

இதை நாம் வன்மையாக கண்டிக்கின்றோம். ஏனென்றால், தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒவ்வொரு விடயத்திலும் இந்நாட்டின் அனைத்து இன மக்களினதும் பங்கும், பங்களிப்பும் பெறப்பட வேண்டும் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் ஐக்கிய சமாதான கூட்டமைப்பு செய்து கொண்ட எழுத்துமூல ஒப்பந்தத்தில் முக்கிய அம்சங்களில் ஒன்றாக குறிப்பிடப்பட்டு உள்ளது.

இதே நேரம் ஞானசார தேரரை தலைவராக கொண்ட செயலணியில் முஸ்லிம் உறுப்பினர்கள் இயங்க போகின்றார்களா? என்கிற சந்தேகமும் கண் முன் நிற்கின்றது.

இச்செயலணிக்கு ஞானசார தேரர் உள்வாங்கப்பட்டு தலைவராக நியமிக்கப்பட்டு இருப்பதை படித்த, பண்பான சிங்கள மக்களும் விரும்பவே இல்லை. முதல் கோணல் முற்றும் கோணல் என்று தமிழில் பழமொழி உள்ளது. இச்செயலணி ஆரம்பிக்கப்பட்ட வேகத்திலேயே பிசுபிசுத்து போகலாம்.

## மாகாணங்களுக்கு இடையி...

செயலணிக் கூட்டத்தின் போதே, ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொவிட் தொற்றுப் பரவல் காரணமாக, பாடசாலை மாணவர்களின் கல்வி பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதால், அது தொடர்பில் அவதானம் செலுத்தி, கல்விப் பொதுத் தராதர சாதாரணதரம் மற்றும் உயர்தரங்களுக்கான பாடசாலைக் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான சுகாதாரப் பரிந்துரைகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று இதன்போது தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பில், பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தி, கல்வி நடவடிக்கைகளை விரைவில் ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு, ஜனாதிபதி தெரிவித்தார்.

பல்கலைக்கழக முதலாமாண்டு மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பது தொடர்பில் விரைவில் ஆராயுமாறும், சுகாதார மற்றும் கல்வி அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தினார்.

பொது இடங்கள், வர்த்தக நிலையங்கள், சிற்றுண்டிச் சாலைகள் உள்ளிட்ட பொது மக்கள் அதிகளவில் நடமாடும் இடங்களுக்குச் செல்லும் போது, தடுப்பூசி அட்டையைக் கட்டாயம் எடுத்துச் செல்வதற்கான இயலுமை தொடர்பில் உடன் கண்டறியவும், இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

தடுப்பூசி ஏற்றிக்கொள்ளாத நபர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்க, கொரோனாசட்டதிட்டங்களில்வாய்ப்பளிக்கப்பட்டு உள்ளதென்று சுட்டிக்காட்டிய சுகாதார அதிகாரிகள், இது தொடர்பில் சட்ட மா அதிபரின் ஆலோசனையைப் பெற்றுள்ளதாகவும் குறிப்பிட்டனர்.

பாடசாலை மாணவர்களுக்கான தடுப்பூசி ஏற்றலின் முன்னேற்றம் தொடர்பிலும், ஜனாதிபதி இதன்போது ஆராய்ந்தறிந்தார்.

கொவிட் மரணங்களின் வீதம் மற்றும் தொற்றுக்கு உள்ளாகும் நோயாளிகளின் எண்ணிக்கையைக் குறைத்துக்கொள்ள, தடுப்பூசி ஏற்றல் வேலைத்திட்டத்தை மேலும் விரிவுபடுத்த வேண்டியதன் அவசியம் தொடர்பிலும் ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

அத்துடன், பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் மக்களுக்கான தடுப்பூசி ஏற்றல் வேலைத்திட்டத்துக்கு நடமாடும் சேவையை முன்னெடுக்குமாறும் அனைத்து மக்களும் தடுப்பூசி ஏற்றிக்கொள்வதற்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்குமாறும், ஜனாதிபதி அவர்கள் ஆலோசனை வழங்கினார்.

இதற்காக, பொதுச் சுகாதார அதிகாரிகள், கிராம சேவையாளர்கள் மற்றும் பிராந்திய அரசியல்வாதிகளின் உதவிகளைப் பெற்றுக் கொள்ளுமாறும் ஆலோசனை வழங்கினார்.

தடுப்பூசி ஏற்றல் தொடர்பில் சில குழுவினர் முன்னெடுத்துவரும் போலிப் பிரசாரங்கள் தொடர்பில், மாகாண சுகாதாரப் பணிப்பாளர்களால் ஜனாதிபதிக்கு எடுத்துரைக்கப்பட்டது. தடுப்பூசி தொடர்பில் பொது மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்த முயற்சிக்கும் சமூக வலைத்தளங்கள் உள்ளிட்ட ஒருங்கிணைக்கப்பட்ட குழுக்கள் தொடர்பில் உடன் கண்டறியுமாறு, பொலிஸ் மா அதிபருக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார்.

தற்போதைய தொற்றுப் பரவல் நிலைமையைக் கட்டுப்படுத்தி, நாட்டை மீண்டும் பழைய நிலைமைக்குக் கொண்டுவரும் வேலைத்திட்டத்தில், மாகாண மற்றும் மாவட்டச் சுகாதாரப் பணிப்பாளர்கள் அதிக பொறுப்புகளை ஏற்க வேண்டுமென்றும் எடுத்துரைத்த ஜனாதிபதி, அனைத்துத் துறைகளையும் தொடர்புபடுத்திக்கொண்டு, கொவிட் ஒழிப்பு வேலைத்திட்டத்தை மேலும் வெற்றிகரமாக்கிக் கொள்ள அர்ப்பணிப்புடன் செயற்படுமாறு அவர்களிடம் கேட்டுக்கொண்டார்.

கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலுக்கு மத்தியில் சவாலுக்கு இலக்காகியுள்ள பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பும் முக்கிய துறையாக சுற்றுலாத்துறை அடையாளம் காணப்பட்டுள்ளது. அது தொடர்பான பல புதிய தீர்மானங்களுக்கு வரவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதென்று, சுற்றுலாத் துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

சுகாதார நிபுணர்களின் ஆலோசனைகள் பிரகாரம், சுற்றுலாத்துறையை மேம்படுத்த, அதிக அக்கறையுடன் அனைவரும் ஒத்துழைப்பு வழங்கிச் செயற்பட வேண்டுமென்று, ஜனாதிபதி வலியுறுத்தினார்.

எதிர்காலத்தில் இலங்கையில் நடத்தப்படவுள்ள சர்வதேச விளையாட்டுப் போட்டிகளைப் பார்வையிடுவதற்காக, வெளிநாட்டு இரசிகர்கள் வருவதற்கான வாய்ப்பளித்தல் தொடர்பிலும், இதன்போது கலந்துரையாடப்பட்டது. அவர்களை உயிர்க் குமிழிக்குள் வைத்திருந்து, தேவையான வசதிகளை வழங்க முடியுமென்று, சுகாதாரத் துறையினர் எடுத்துரைத்தனர்.

## செயலணியில் எங்களுக்கு...

ஆனால், 'ஒரு நாடு' என்று சொல்லி விட்டு, அதில் கூட தமிழருக்கு இடம் கொடுக்க இந்த அரசுக்கு அக்கறை இல்லையே, அவ்வளவுக்கு வெறுப்பு மற்றும் அலட்சியமா என்றும் கேட்டு இருந்தேன்.

அதே போல் முஸ்லிம் உறுப்பினர்களின் நியமனம் இஸ்லாமிய சகோதரர் மீது விசேட பாசம் என்பதால் அல்ல என்றும், அவர்களை பக்கத்தில் வைத்து செய்யத்தான் முஸ்தீபு' என்றும் கூறியிருந்தேன்.

ஞானசாரர் தலைமையில் குழு என்றால், யாரை நியமித்து என்ன பயன்?, ..பையை திறக்காமலேயே பைக்குள் என்ன இருக்கிறது என புரிகிறது.. எனவும் கூறியிருந்தேன்.

இதை ஏன் இப்போது மீண்டும் கூறுகிறேன் என்றால், இக்குழுவில் தமிழரை நியமிக்க ஜனாதிபதியை இணங்க செய்து விட்டோம், சாதித்து விட்டோம், என அரசுக்குள் இருக்கும் செந்தமிழர் சிலர் இப்போது சொல்லுவார்கள். அதுதான்..

## ஞானசார தேரர் நீக்கப்பட...

உருவாக்குகின்ற செயலணி நிறுவப்பட்டுள்ளதானது கவலைக்குரியது என்றார்.


பொதுபலசேனாவை உருவாக்கியது யார்? என்பது இப்போது வெளிப்படையாகவே நிரூபணமாகி வெளியில் தெரிய வந்து உள்ளது. அரசாங்கம் சிங்கள பெரும்பான்மை மக்கள் மத்தியில் செல்வாக்கு இழந்து வருகின்றது.

செல்வாக்கை மீண்டு தூக்கி பிடித்து நிமிர்த்துவதற்காகவே ஜனாதிபதி செயலணியில் ஞானசார தேரர் நியமிக்கப்பட்டிருக்கிறார். இந்நாட்டின் இரண்டாவது பெரும்பான்மை இனத்தவர் தமிழர்கள்.

ஒருதமிழர்கள்கூட செயலணிக்கு உள்வாங்கப்படவில்லை. இது பாரதூரமான பிழை ஆகும். இந்த ஜனாதிபதி மீள கட்டமைக்கப்பட வேண்டும். இதில் இருந்து ஞானசார தேரர் நீக்கப்படுதல் வேண்டுமென செல்வம் அடைக்கலநாதன் கூறினார்.

கல்முனை NET e paper kalmunainet.com

கல்முனைநெற் ஊடக வலையமைப்பு
பிரதான வீதி, பாண்டிருப்பு,
கல்முனை. இலங்கை.
+94 76 2933026
+94 77 3457915
kalmunainet@gmail.com



மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாங்கண்ட தில்.

மக்களே போல் இருப்பார் கயவர், அவர் மக்களை ஒத்திருப்பது போன்ற ஒப்புமை வேறு எந்த இருவகைப் பொருள்களிடத்திலும் யாம் கண்டதில்லை.

# கொதிநிலை அரசியல்

ஒரே நாடு; ஒரே சட்டம்: பொதுபல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் ஜனாதிபதி செயலணியின் தலைவராக நியமிக்கப்பட்டிருப்பது, இலங்கையின் அரசியலில் மற்றொரு கொதிநிலையை ஏற்படுத்தியிருக்கிறது.

ஒரே நாடு; ஒரே சட்டம் என்ற எண்ணக்கருவை செயல்படுத்தும் வகையில், புதிய செயலணி ஒன்றை ஜனாதிபதி நியமித்திருக்கிறார். கலகொட அத்தே ஞானசார தேரர் தலைமையில் உருவாக்கப்பட்டுள்ள இதற்கான செயலணி குழுவில் 13 பேர் அங்கம் வகிக்கின்றனர். ஒன்பது சிங்களவர்களும் நான்கு முஸ்லிம்களும் இந்த குழுவில் உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். தமிழர்கள் எவரும் இந்த செயல் அணியில் இடம்பெறவில்லை.

இலங்கையில் ஒரே நாடு - ஒரே சட்டம் என்பதை செயல்படுத்துவது தொடர்பாக ஆராய்ந்து அதற்கான சட்ட வரைபை தயாரித்தல், இந்த செயல் அணியின் பிரதான பணியாக இருக்கும். அதேநேரம், நீதி அமைச்சினால் தயாரிக்கப்பட்டுள்ள சட்ட வரைவுகளை ஆராய்ந்து, திருத்தங்கள் இருப்பின் அதற்கான முன்மொழிவுகளை பரிந்துரைக்கவும் இந்தச் செயலணிக்கு அதிகாரம் வழங்கப்பட்டு இருக்கின்றது.

தேர்தல் காலத்தில் ஜனாதிபதி வழங்கிய வாக்குறுதிக்கு அமைய இந்த செயலணி உருவாக்கப்பட்டிருக்கிறது என்பது அரசாங்கத் தரப்பின் தகவல். இதன் நோக்கம் தூய்மையாக இருந்தாலும், செயலணியின் தலைவராக, கலகொட அத்தே ஞானசார தேரர் நியமிக்கப்பட்டிருப்பதை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி உட்பட முக்கிய அரசியல் தலைவர்கள் கடுமையாக கண்டித்து இருக்கின்றார்கள்.

சட்டம் ஒழுங்கு மற்றும் நீதியோடு சம்பந்தப்பட்ட இந்த ஜனாதிபதி செயலணிக்கு, சட்டத்தை மீறிய ஒருவரை நியமிப்பது எவ்வாறு என்று எதிரணியினரும் தமிழ் - முஸ்லிம் எம்பிக்களும் கேள்வி எழுப்புகிறார்கள்.

உண்மையில், நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டில் சிறையில் இருந்தவர் ஞானசார தேரர். ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழேயே இவர் விடுதலை செய்யப்பட்டார். அதேநேரம், அளுத்கமவில் பேரணி நடத்தி இன மோதலை ஏற்படுத்துவதற்கு காரணகர்த்தாவாக இருந்தவர் ஞானசார தேரர். தமிழ் - முஸ்லிம் மக்கள் தொடர்பான வெறுப்பேற்றும் பேச்சுக்களை பேசி, இனங்களுக்கிடையில் குரோதங்களை ஏற்படுத்தி வருபவரும் இவர்தான்.

இப்படிப்பட்ட பின்னணியில் உள்ள ஒருவரை, ஜனாதிபதி செயலணியின் தலைவராக, ஜனாதிபதியே நியமித்திருப்பது எந்த வகையிலும் ஏற்புடையதாக இல்லை.

ஆரோக்கியமான அரசியலுக்கு இவரது நியமனம் மிகவும் பாதிப்பை ஏற்படுத்தும்.

13 பேர் கொண்ட இந்த குழுவில் இலங்கையின் இரண்டாவது பெரும்பான்மை இனமான தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்தி ஒருவரேனும் நியமிக்கப்படாதது, தமிழர்களை அலட்சியப்படுத்தும் செயலாகவும் தெரிகிறது.

ஒரே நாடு - ஒரே சட்டம் என்ற நீதியை நிலைநாட்ட களமிறங்கியிருக்கும் ஜனாதிபதிக்கு, தமிழர்களை புறக்கணித்து செயல்படுவது தவறு என்பது புரியாமல் இல்லை. அதேபோல, ஞானசார தேரரும் தலைமைப் பதவிக்கு பொருத்தமில்லாதவர் என்பதும் அவருக்குத் தெரியாததல்ல.

இந்த நிலையில், அவசர அவசரமாக வெளியாகியிருக்கும் இந்தச் செயலணிக்கான வர்த்தமானி அறிவிப்பு, ஓர் அரசியல் காய் நகர்த்தலாகவே பார்க்க முடிகிறது.

நாடு மிகப்பெரிய பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருக்கும் நிலையில், புதிய அரசியல் சர்ச்சை ஒன்றைக் கிளப்பி மக்களைத் திசைதிருப்பும் ஒரு முயற்சியாக இதனை கொள்ளமுடியும்.

ஞானசார தேரர் நியமனமும் தமிழர்களின் புறக்கணிப்பும் இந்தச் செயல் அணி மீது முழுமையாக நம்பிக்கை இழக்க வைத்திருக்கிறது.

இப்படியான திட்டமிட்ட நெருக்கடிகளையும் சர்ச்சைகளையும் உருவாக்கி, கோட்டா தலைமையிலான இந்த அரசு, எதனைச் சாதிக்க போகிறது?



# சட்டவிரோத மீன்பிடி தொழிலுக்கு முடிவு!

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

ஒலுவில் துறைமுகத்தினை மீன்பிடிச் செயற்பாடுகளுக்காக விரைவில் திறக்கப்படும் என்று தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படுகின்ற அனைத்து சட்டவிரோத தொழில் முறைகளுக்கும் முடிவு கட்டப்படும் எனவும் தெரிவித்தார்.

அம்பாறை உத்தியோகபூர்வ விஜயத்தினை கடந்த புதன்கிழமை மேற்கொண்ட கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில், கல்முனை கடற்றொழில் திணைக்களத்தில் கலந்துரையாடலின் போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.



> “ஒலுவில் துறைமுகம் அம்பாறைக்கு வளமான எதிர்காலம்”

அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் மற்றும் கடற்றொழிலாளர் அமைப்புக்கள் மற்றும் கடற்றொழில் திணைக்கள அதிகாரிகள் கலந்து கொண்ட குறித்த கலந்துரையாடலில் மாவட்ட கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் எதிர்பார்ப்புக்கள் தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது.

கடற்றொழிலாளர் பிரதிநிதிகளினால் முன்வைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரின் தேர்தல் வாக்குறுதிக்கு அமைய ஒலுவில் மீன்பிடித் துறைமுகத்தின் செயற்பாடுகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் எனவும், மண்ணரிப்பு போன்ற காரணங்களினால் ஒலுவில் துறைமுகத்தின் செயற்பாடுகளை விரும்பாத மக்களின் நியாயமான காரணங்களுக்கு பரிகாரங்களை வழங்குவதன் மூலம் அனைவருடைய சம்மதத்துடன் ஒலுவில் மீன்பிடித் துறைமுகம் ஆரம்பிக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

மேலும், ஒலுவில் துறைமுகத்தினைப் பயன்படுத்தி ஆழ்கடல் மீன்பிடித் தொழிலில் ஈடுபட விரும்புகின்றவர்களுக்கு தேவையான பயிற்சிகளை வழங்குவதுடன், படகுகளை வாங்குவதற்கு கடன் வசதிகளும் ஏற்பாடு செய்து தருவதாக உறுதியளித்த கடற்றொழில் அமைச்சர், கிழக்கு மாகாணத்தில் நீர்வேளாண்மைக்கு பொருத்தமான இடங்கள் ஆய்வுகள் மூலம் அடையாளப்படுத்தப்பட்டு விரும்புகின்றவர்களுக்கு அவை வழங்கப்படும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன், படகு கண்காணிப்புக் கருவிகளை பெற்றுத் தருவதுடன் தொலைத் தொடர்புக் கருவிகளுக்கு வரிக் குறைப்புச் செய்வதற்கும் நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சட்டவிரோத தொழில் முறைகள் அனைத்திற்கும் முடிவு கட்டப்படும் எனவும், மாவட்ட மீனவர்கள் விரும்பினால் மூன்று இஞ்சிக்கு குறையாத கண்களை உடைய வலைகளைப் பயன்படுத்தி சுருக்கு வலை தொழிலில் ஈடுபடுவதற்கு அனுமதி வழங்குவதாகவும் தெரிவித்தார்.



அதனைத் தொடர்ந்து, ஒலுவில் துறைமுகத்திற்கு விஜயம் மேற்கொண்ட கடற்றொழில் அமைச்சர், மீன்பிடித் துறைமுகத்தினை ஆரம்பிப்பது தொடர்பாக துறைசார்ந்தவர்களுடன் கலந்துரையாடியதுடன், சுமார் 300 பேருக்கு உடனடி வேலை வாய்ப்பினை வழங்கங்கூடிய குளிரூட்டல் பொறிமுறையை இயக்குவது தொடர்பாகவும் சம்மந்தப்பட்டவர்களுடன் கலந்துரையாடினார்.

பின்னர், திருக்கோவில் பிரதேசத்தில் கடலரிப்பினால் பிரதேச மக்கள் எதிர்கொள்ளும் அசௌகரியங்களை பார்வையிட்ட கடற்றொழில் அமைச்சர், அருகம்பை உட்பட பல்வேறு பிரதேசங்களுக்கு கண்காணிப்பு விஜயத்தினை மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# திருக்கோயில், பனங்காடு விவசாயிகளின் அவலம்

## யானை வேலி அமைத்து தருமாறு தமிழ் எம். பிகளிடம் மன்றாடியும் வேலையில்லை

நிப்ராஸ்

திருக்கோயில் பிரதேச சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட பெரியவட்டை சுமார் ஆயிரம் ஏக்கர்களுடைய விவசாயக் காணி. சுமார் ஐநூறு பேர் இக்காணிக்குச் சொந்தக்காரர்களாக உள்ளனர். தாய்வழி அல்லது தந்தை வழிகளில் இக்காணிகள் இவர்களுக்கு மிக நீண்ட காலமாக உரித்துக்களாக சொந்தங்கள், உடன்பிறப்புக்களுக்கு உரிமையாகி வருகிறது.

திருக்கோயில், பனங்காடு, ஆலையடிவேம்பு, விநாயகபுரம் போன்ற பிரதேசத்தவர்களே, இக்காணிகளின் சொந்தக்காரர்களாக உள்ளனர்.

பொத்துவிலிலிருந்து திருக்கோயில் வரும் வழியில், காஞ்சிரங்குடா சந்தியின் தென்புறத்திலும், அக்கரைப்பற்றிலிருந்து சாகாமம் வரும் வழியில், வடதிசையிலும் இந்த வயல் பிரதேசமுள்ளது. கஞ்சிக்குடிச்சாறு மற்றும் ரூபஸ் குளங்களின் எல்லைகளிலுள்ள இக்காணிகளுக்கு இன்னும் நீர்ப்பாசன வசதிகள் கிடைக்கவில்லை.

சுமார் 120 கிலோ மீற்றர் தூரமிருந்து நீர்பாசனத்தைக் கொண்டு வருவது இயலாத காரியமல்ல. ஆனால், வரண்ட மற்றும் கெட்டியான மண்வளமுள்ள இந்தப் பகுதியில், இந்த முயற்சிகள் இதுவரை செய்யப்படாதது ஏன் என்ற ஆதங்களுடன்தான், இந்த விவசாயிகள் சேனைப் பயிர்ச் செய்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

முறையான நீர்ப்பாசனங்கள் கிடைத்தால், வேளாண்மைச் செய்கையில் ஈடுபடுவீர்களா? எனக் கேட்டதற்கு பெருமூச்சுக்களுடன் சில விவசாயிகள் பதிலளித்தனர்.

வேளாண்மை செய்கை, இன்றைய நிலைமைகளில் கற்பனைக்கும் எட்டாத விடயம். பசளை பாவனை நிறுத்தப்பட்டு சேதனப் பசளையை அரசாங்கம் ஊக்குவிக்கிறது. விதைநெல் பற்றாக்குறை, பராமரிப்புச் செலவுகள், நெல்லை விற்பதிலுள்ள திண்டாட்டம் மற்றும் மூன்றாம் சக்திகள் நெல்லுக்கான விலையை தீர்மானிக்கின்றமை என்பவற்றை நினைத்தால் கச்சான், சோளம் மற்றும் மரவள்ளி போன்ற சேனைப் பயிர்ச்செய்கைகளில் ஈடுபடுவது

தொடர்ச்சி 06ஆம் பக்கம்...

ஒரு நாட்டின் வளர்ச்சியில் பெண்களின் பங்கு மிக முக்கியமானது. வளர்ந்த நாடுகளில் எல்லாம் பெண்களின் சுதந்திரம், பாதுகாப்பு உறுதி செய்யப் பட்டிருக்கிறது.

பெண் விடுதலை, பெண் பாதுகாப்பு, பெண் களுக்கான சம உரிமை அனைத்தும் சிறப்பாக உள்ள நாடுகளில் முன்னேற்றமும் அதிக அளவில் இருப்பதைக் காண முடிகின்றது!

ஆனாலும், நம்மை போன்று வளர்ந்துவரும் நாடுகளில் இவ்வாறு சமவுரிமை பேணப்படுகின் றதா? என்பதே இன்றைய கேள்வியாகவும் உள்ளது.

# தடைகளை உடைத்தே அரசியலில் தடம் பதித்தேன்



இவ்வாரா கல்முனைநெற் மின் இதழுக்கு கல்முனை மாநகர சபை உறுப்பினர் நந்தினி விமலாதித்தன் வழங்கிய சிறப்பு பேட்டி

**கே எவ்வளவுதான் பெண்கள் தொடர்பில் எம்மவர்கள்; விழித் தும் உயர்த்தியும் பேசினாலும் அவர்களை தங்களது அதிகாரத்தின் கீழ் வைத்திருக்க வேண்டும் என்றே ஆண் வர்க்கம் இன்றும் விரும்புகின்றது. இந்நிலை இயல்பா கவே இருக்கின்றது. வீடுகளில் ஆரம்பிக்கும் இந்நிலை அரச அலுவலகம் தொடக்கம் அரசியல்வரை தொடர்கின் றது. இந்நிலை எப்போது மாறும்?**

இது இவ்வாறிருக்க பெண்களுக்கு அரசியல் அறிவு குறைவு என்பது பொதுவான கருத்து. இந்தக் கருத்திற்கு பின்னால் நூற்றாண்டு கால வரலாறு இருக்கிறது. அந்த வரலாறுதான், பெண்களை தொடர்ந்தும் பின்னிலைக்கு இழுத்துச் செல்கின்றது.

இவற்றையெல்லாம் புறந்தள்ளி வெற்றி கொள்ளும் பெண்களும் நம்மில் இருக்கத்தான் செய்கின்றனர். அவ்வாறு அரசியலிலும் குடும்ப வாழ்க்கையிலும் வெற்றி பெற்று வீறுநடைபோடும் அம்பாரை மாவட்ட கல்முனை மாநகர சபை உறுப்பினர் நந்தினி விமலாதித்த னுடனான நேர்காணலினையே உங்களோடு பகிர்ந்து கொள்கின்றேன்.

**கே அரசியலிலும்; பெண்கள் சாதிக்க முடியும். இதனை நிரூபிக் கும் வகையில் பொதுப்பணியில் இருந்து அரசியலுக்குள் நுழைந்து பலவற்றை சாதிக்க நினைக்கும் உங்களை பற்றிய அறிமுகமொன்றை வழங்க முடியுமா?**

கிழக்கு மாகாணத்தின் வளமிக்க மாவட்டமான அம் பாரை மாவட்டத்தில் நற்பிட்டிமுனை எனும் அழகிய கிராமத்தை பிறப்பிடமாக கொண்ட என்னை எல்லோ ரும் நந்தினி என அன்போடு அழைப்பார்கள். நடராசா ஞானம்மா ஆகிய எனது தாய் தந்தைக்கு நான் கடைக் குட்டி. எனது குடும்பத்தில் எனக்கு முன்பாக பிறந்த சகோதரிகள் மூவர் உள்ளனர். ஆகமொத்தத்தில் பெண் களோடு பிறந்த எனக்கு ஆண் சகோதரர்கள் இல்லை.

ஆனாலும் ஆண்களுக்கு சரிநிகராகவே பெற்றோரால் நாங்கள் வளர்க்கப்பட்டோம். எனது இளமைகால நினை வுகள் மறக்க முடியாதது. கல்முனை உவெஸ்லி பாடசாலை யில் ஆரம்பமான இளமைக்கால கல்வி; மட்டக்களப்பு ஊறணி சரஸ்வதி வித்தியாலயம் வரை கொண்டு சென்றது. இக்காலத்தில் இளைஞர் கழகங்களில் இணைந்து பல் வேறு சமூக சேவை வேலைத் திட்டங்களில் முன்னிற்று செயற்பட்டேன். எனது கஸ்டகாலமோ தெரியவில்லை மேலதிக கல்வியை தொடர முடியாத நிலையில் இடைநடுவில் கைவிட்டேன்.

இந்நிலையில் விமலாதித்தன் ஆகிய எனது கணவரை திருமணம் முடித்த நான், தற்போது நான்கு பிள்ளைகளின் தாயாக இருக்கின்றேன். 36 வயதை அடைந்துள்ள நான் கடந்த 10 வருடங்களுக்கும் மேலாக சமூக சேவை யில் இணைந்து பணியாற்றி வருகின்றேன். இதன் பரிசாக 2018ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலில் கல்முனை மாநகர சபையில் போட்டியிட்டு மாநகர சபையின் உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டேன்.

**சட்டம் போடும் இடத்திலும் திட்டம் தீட்டும் இடத்திலும் பெண் குரல் ஓங்கி ஒலிக்க வேண்டும்**

**கே தாங்கள் அரசியல் பயணம் எப்படி ஆரம்பமானது?**

நான் ஏற்கனவே சொன்னது போல வேள்வி அமைப்பு உள்ளிட்ட பல்வேறு சமூக அமைப்புக்களில் இணைந்து பணியாற்றினேன். வேள்வி அமைப்பு எனக்கு ஊக்கத்தை தந்தது. இருந்த போதிலும் மக்களது தேவையினை முழுதாக பூர்த்தி செய்ய முடியாமல் போனது.

அரசியலில் உள்நுழைவதன் மூலமே மக்களின் பல்வேறு தேவைகளையும் பூர்த்தி செய்யலாம் எனவும் என் உள்மனது அடிக்கடி சொன்னது. நம்பிக்கையின் அடிப் படையில் அரசியலுக்குள் வர நினைத்தேன்.

இதன் ஆரம்பமாக 2018ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சி மன்ற தேர்தலில் கல்முனை மாநகர சபை யின் 9ஆம் வட்டாரத்தில் பெண்களுக்கு வழங்கப்பட்ட 25 சதவீத ஒதுக்கீட்டு அடிப்படையில் தெரிவு செய்யப் பட்டேன்.

இவ்வாறு நான் தெரிவு செய்யப்படுவதற்கு பெண் களுக்கு வழங்கப்பட்ட 25 சதவீத ஒதுக்கீடே பிரதான காரணம். மேலும் எனது கணவரும் ஒரு காரணம். நான் போட்டியிட்ட கட்சியின் நீண்ட நாள் தொண்டர் எனது கணவர் என்பதோடு எனது சமூக சேவை மற்றும் அரசியல் ஈடுபாடு இதற்கு பக்கபலமாக அமைந்தது.

**கே குடும்பத்தையும் அரசியலையும் எவ்வாறு ஒரே சமயத்தில் மேற்கொள்கின்றீர்கள்?**

நான் அரசியலில் இணைவதற்கும் தொடர்ந்து முன் கொண்டு செல்வதற்கும் அடிப்படை காரணம் எனது குடும்பத்தின் பூரண ஒத்துழைப்பு. அதிலும் குறிப்பாக எனது கணவரின் பங்களிப்பும் ஒத்துழைப்புமே காரணம். அரசியல் மாத்திரமன்றி குடும்பத்தின் அனைத்து தேவைகளையும் கணவருடன் இணைந்து நடைமுறைப் படுத்துகின்றேன். இதன் காரணமாக எனது குடும்ப வாழ்க்கையினையும் அரசியல் பயணத்தினையும் சமாந்தரமாக இரு கோடுகள் போன்று ஒரே சமயத்தில் தடைகளின்றி முன்கொண்டு செல்கின்றேன்.



**"அவமானங்கள் இல்லாமல் வெகுமானங்கள் கிடையாது"**

**கே அரசியலுக்கு வருவதற்கு தடையாக இருந்தவை எவை என கருதுகின்றீர்கள்?**

இதில் முக்கியமான காரணி நான் ஒரு பெண் என்பதே. இதன் காரணமாக நான் பல வழிகளில் ஒதுக்கப்பட் டேன். இதுவே பல தடைகளை தந்தது. அத்தோடு, சில கட்சிகளின் தொண்டர்களினால் மேற்கொள்ளப்பட்ட அவதூறுகள். எதிர்ப்புக்கள் வதந்திகள் என பலவற்றை சொல்லலாம். இதைவிட பலரது அச்சுறுத்தல்கள் சவாலாக அமைந்தது. அத்தோடு, கட்சிகளின் தலையீடு கள் என பல காரணங்கள் தடையாக அமைந்தது.

**கே இந்த தடைகளை உடைக்க முடிந்ததா?**

நிட்சயமாக! அனைத்து தடைகளையும் உடைத்தே இந்த நிலைக்கு வந்துள்ளேன். ஒவ்வொரு தடைக் கற்களையும் படிக்கற்களாக மாற்றினேன். அதுவே எனக்கு வெற்றியை தந்தது. எத்தகைய தடைகள் வந்தாலும் அவற்றையெல்லாம் உடைத்தெறிந்து பெண்களாலும் பலவற்றை சாதிக்க முடியும் என நிரூபித்துள்ளேன்.

தங்களது கணவரின் ஒத்துழைப்பு மற்றும் பிள்ளைகளின் பங்களிப்பு எவ்வாறு உங்கள் அரசியலுக்கு உதவுகின்றது.

ஒருவரியில் சொல்லப்போனால் அளப்பரியது என்றே சொல்வேன். எனது வளர்ச்சியிலும் உயர்ச்சியிலும் முன் நிற்கின்றவர் எனது கணவர். அதுவே எனது பலம். மேலும் எனது பிள்ளைகள் மற்றும் உறவுகள் கிராம மக்கள் ஆதரவாளர்களின் ஒத்துழைப்பு மற்றும் பங்களிப்பை சொல்லலாம். குறிப்பாக தேர்தல் காலத்தில் எனக்கு முன்பாக வைக்கப்பட்ட விமர்சனங்கள் எதிர்ப்புக்கள் அனைத்தையும் தவிடு பொடியாக்கியவர்களே இவர்கள். அவர்களது பக்கபலமான செயற்பாடுகள் எனது வெற்றிக்கு வழிவகுத்தது.

**கே உங்கள் கிராமத்தவர் உங்கள் கருத்தை மதிக்கின்றார்களா? அவர்களை பொறுத்த மட்டில் உங்களை எவ்வாறு நோக்குகின்றனர்?**

பெண் எனும் அடிப்படையிலும் நான் போட்டியிட்ட கட்சி எனும் அடிப்படையிலும் ஆரம்பத்தில் எதிர்ப்புக் களே அலை அலையாக அதிகமாக எழுந்தது. அவ்வாறு எதிர்ப்புக்கள் உருவானபோதிலும் மக்களின் நலன் மற்றும் அபிவிருத்தி ஆகியவற்றை மனதில் கொண்டு மக்களது தேவையே எனது சேவை என எண்ணம் கொண்டு களத்தில் குதித்தேன். போனஸ் ஆசனத்தின் மூலம் தெரிவு செய்யவும் பட்டேன்.

இதன் பின்னர் கிராமத்திற்கு தேவையான வீதி அபிவி ருத்தி தெருவிளக்கு பொருத்துதல் விளையாட்டுக் கழ கங்களுக்கான உதவிகள் வாழ்வாதார உதவிகள் குறைவீடு நிவர்த்தி மற்றும் தொழில் வாய்ப்பு போன்றவற்றை செய்து காட்டினேன். இதன் பின்னராகவே மக்கள் உணர்ந்து கொண்டதுடன் அவர்களது ஆதரவினை மேலும் வழங்கி வருகின்றனர்.

**கே அரசியலுக்கு வரும் முன் உங்கள் அனுபவம் எப்படி இருந்தது? இப்போது எப்படி உள்ளது?**

அரசியலுக்கு வரும்முன் எனது கணவர் எனது பிள்ளைகள் எனது குடும்பம் எனும் அடிப்படையில் குடும்பத்தின் தேவையினை மாத்திரம் பூர்த்தி செய்ய வேண்டியவளாக இருந்தேன். அத்தோடு முடிந்த சமூக சேவையினையும் செய்து வந்தேன். ஆனால் தற்போது அந்நிலை முற்றாக மாறுபட்டுள்ளது.

எனது கிராம மக்களின் தேவை என்ன? எனது தொகுதி மக்களின் அபிலாசைகள் என்ன? என்பவற்றை அறிந்து செயற்பட வேண்டியவளாக உள்ளேன். ஆகவே, பொறுப்பு மிக்கவராக உணர்கின்றேன். இதன் காரணமாக முடிந்த வரை பெற்றுக்கொண்டுள்ள அனுபவத்தினை பயன் படுத்தி மக்களது தேவைகளை பூர்த்தி செய்ய முயற்சி செய்து வருகின்றேன்.

**கே உங்களால் சாதிக்க முடிந்தவை மற்றும் சாதிக்க நினைப்பவை தொடர்பில் உங்களது கருத்து என்ன?**

பெண்களும் அரசியலில் சாதிக்க முடியும் என நிரூபித்துள்ளேன். ஏனைய பெண்களையும் அரசிய லுக்குள் அழைத்துவருவதற்கு காரணமாக அமைந்துள் ளேன். இதுவும் நான் சாதித்தவையாக நினைக்கின்றேன்.

தொடர்ந்தும் பல சேவைகளை மக்களுக்கு வழங்கி சாதனை படைக்க வேண்டும் என ஆசைப்படுகின்றேன். இதன் காரணமாக தொடர்ந்துவரும் தேர்தல்களிலும் போட்டியிட்டு பெண்களாலும் அனைத்து விடயங்களிலும் ஒளிர முடியும் என்பதுடன் என்போன்ற பெண்களுக்கு முன்னுதாரணமாக இருக்க ஆசைப்படுகின்றேன்.

**கே உங்களை போன்ற பெண்களுக்கு நீங்கள் சொல்ல விரும்புவது என்ன?**

பெண்களும் ஆண்களுக்கு சமமானவர்கள் என்பதை சொல்ல விரும்புகின்றேன். எவ்விதத்திலும் பெண்களை குறைத்து மதிப்பிடுவது தவறானது எனவும் கூறவிரும்புகின்றேன். சட்டம் போடும் இடத்திலும் திட்டம் தீட்டும் இடத்திலும் பெண்கள் குரல் ஓங்கி ஒலிக்க வேண்டும்.

அவ்வாறு சட்டமும் திட்டமும் தீட்டும் இடமாக அரசியல் இருப்பதால் பெண்கள் கண்டிப்பாக அரசியலுக்கு வரவேண்டும் என அழைப்பு விடுக்கின்றேன். அவமானங்கள் இல்லாமல் வெகுமானங்கள் கிடையாது என்பதுடன் அனைத்தையும் தாண்டி பெண்கள் பலவற்றில் சாதிக்கவும் பெண்களிடம் அறைகூவல் விடுக்கின்றேன். இந்நிலையில் அரசியலுக்குள் வர நினைக்கும் அனைத்து பெண்களுக்கும் வாழ்த்துகள் தெரிவிக்கின்றேன்.

நேர்காணல்: வி.சுகிர்தகுமார்

# மாயக்கல்லிமலை சிலை வைப்பு: நல்லாட்சி அரசின் பலவீனம்

## இறக்காமம் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கலீலுர் ரஹ்மான்



இறக்காமம் மாயக்கல்லி மலையில் சிலை வைக்கப்பட்ட விவகாரம் நல்லாட்சி அரசாங்கத்தின் பலயீனத்தையே காட்டியிருந்ததாக, இறக்காமம் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் தற்போதைய உறுப்பினருமான கலீலுர்ரஹ்மான் தெரிவித்தார்.

கல்முனைநெற் இணையத்தளத்துக்கு அவர் வழங்கிய நேர்காணலில் கலீலுர் ரஹ்மான் தெரிவித்தவை.

**? இறக்காமம் பிரதேச சபையின் தவிசாளராக கடந்த மூன்று வருடங்களாக கடமையாற்றிய நீங்கள், இப்போது சபையின் உறுப்பினராக உள்ளீர்கள். இந்த மாற்றம் எவ்வாறு நிகழ்ந்தது?**

எனது கட்சிக்காரர்களே என்னைத் தோற்கடித்து பதவியிறக்கினர். இதில், கட்சிக் கொள்கையை விட, பணமும், தனிப்பட்ட குரோதங்களும் பங்காற்றியிருந்தது. எனினும், இதனால் நான் கவலைப்படவில்லை, என்னை இழந்த மக்கள் கவலைப்படுகின்றனர்.

**? ஆச்சர்யமான விடயம்தான், உங்கள் கட்சி எது, இது பற்றி கட்சித் தலைமைக்கு அறிவிக்கவில்லையா?**

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் தான், நான் போட்டியிட்டேன். 2018 பெப்ரவரியில் நடந்த அந்தத் தேர்தலில் எமது கட்சிக்கு நான்கு ஆசனங்கள் கிடைத்தன.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் மூன்று ஆசனங்கள், ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு கிடைத்த ஒரு ஆசனத்தையும் சேர்த்து எட்டு ஆசனங்களுடன் நாங்கள் ஆட்சியமைத்தோம்.

மூன்று வருடங்களும் மூன்று மாதமும் தவிசாளராக நான்இருந்தேன். இடையில், எனது கட்சிக்காரர்கள் மூவர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்கள் ஐவருடன் இணைந்து, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினரின் ஆதரவுடன் இணைந்து என்னைக் கவிழ்த்தனர்.

இதிலுள்ள சதிகள், பின்னணிகள் பற்றி எனக்குத் தெரியும். எனினும், கட்சித் தலைமைக்கு நான் அறிவிக்கவில்லை. எப்படியோ இதுபற்றி தலைமை அறிந்து கொண்டது.

**? மூன்று வருடங்கள் இறக்காமம் பிரதேச சபை தவிசாளராக இருந்து, பெரிதாகச் சாதித்த விடயங்கள் எவை?**

எனது பதவிக்காலத்தின் அந்திம காலம் மிக ஆபத்தானதாக இருந்தது. கொரோனாவால் மரணிக்கின்ற முஸ்லிம்களின் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்யாமல் தீயிலிட்ட சூழலது. எப்படியோ நல்லடக்கத்துக்கு அனுமதி வழங்க அரசாங்கம் தயாராகி, பொருத்தமான இடங்களைத் தேடச் சொன்னது. இறக்காமம், மறிச்சுக்கட்டி பிரதேசங்களில் நீர்த்தன்மை இல்லை என்பது ஆராய்ச்சியில் நிரூபிக்கப்பட்டும் இருந்தது. இதற்கும் மேலாக சில சாட்சியங்களை நான் பெற்றுக்கொடுத்தேன்.

> **என்னைத் தோற்கடிக்க பணமும் குரோதங்களுமே துரும்பாய் இருந்தன**

**? அவ்வாறு நீங்கள் பெற்றுக் கொடுத்த சாட்சியங்களைச் சொல்ல முடியுமா?**

இறக்காமம் பிரதேசம் மிக உயரமான பகுதி. டீ. எஸ். சேனநாயக்க சமுத்திரம் உடைந்து அம்பாரை மாவட்டமே 1957 இல் மூழ்கியபோதும், இறக்காமம் மூழ்கவில்லை. அதுமட்டு மல்ல, 1994 இல், நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை, குழாய் நீர் விநியோகம் செய்வதற்கு முன்னர், குழாய்க் கிணறுகள் ஊடாக நீரைப் பெறுவதற்கு நூறடிகள் தோண்டிய போதும், நீர் கிடைக்கவில்லை. இவற்றைச் சாட்சிகளாக நான் முன்வைத்தேன்.

இதன் பிறகு, வாங்காமம் கீச்சான் குளத்தில் நான்கு ஏக்கர் காணியை வாங்கினோம். இங்குதான், கொரோனா ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்யத் தீர்மானிக்கப்பட்டது.

**? இப்போது, ஜனாஸாக்கள் இங்கு அடக்கம் செய்யப்படுகிறதா? இறக்காமத்திலிருந்து எத்தனை கிலோ மீற்றர் தூரத்திலுள்ளது?**



இல்லை. இந்தக் காணியை உரிமையாளர் தருவதாகக் கூறினார். பின்னர், ஏதோவொரு காரணத்துக்காக அந்தக் காணியை விற்றுவிட்டார். இறக்காமத்திலிருந்து 13 கிலோமீற்றர் தூரத்தில் இந்த வாங்காமம் கீச்சான்குளம் உள்ளது.



**? மாயக்கல்லி மலையில் புத்த பெருமானின் சிலை வைக்கப்பட்ட விடயம் தொடர்பில் உங்கள் நிலைப்பாடு என்ன?**

மத நம்பிக்கை என்பது அறிவையும் விஞ்சிய விடயம். ஏன், விஞ்ஞானத்தையும் இது சவாலுக்கு உட்படுத்துகிறதுதானே! எவரது மத நம்பிக்கைகளையும் மலினப்படுத்த நான் தயாரில்லை. எனது நம்பிக்கை என்னுடன்தான்.

ஆனாலும், தமிழர்கள் வாழ்கின்ற மாணிக்கமடு மற்றும் முஸ்லிம்கள் வாழ்கின்ற இறக்காமம் போன்ற பிரதேசங்களில், இவ்விரு சமூகத்தவர்களதும் நம்பிக்கைக்கு அப்பாலான இன்னொரு வழிபாடு எதற்கு? இது தான், சமூகங்களைச் சந்தேகப்படுத்தும் கேள்வி.

இதைத் தான், திணிப்பு என்கின்றனர் இவர்கள். இது மட்டுமல்ல, சகல சமூகங்களையும் அரவணைக்கின்ற நல்லாட்சியில் இது நடந்ததே! அதுவும் எனது கட்சியான, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தலைமை தாங்கிய நல்லாட்சி அரசாங்கத்தில் நடந்ததே, இதுதான் கவலை.

**நேர்காணல்: நிப்ராஸ்**

03ஆம் பக்க தொடர்ச்சி...

## திருக்கோயில், பனங்காடு விவசாயிகளின் அவலம்

மேலென இவர்கள் தெரிவிக்கின்றனர்.

மூன்று மாதப் பயிர்களான கச்சான், சோளம் என்பவை பெரும் சிரமமான தொழிலில்லை. யானைப் பிரச்சினை தீர்ந்துவிட்டால், வாழ்நாள் முழுவதும் சேனைப் பயிர்ச்செய்கையில் ஈடுபடவே விரும்புவதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றர்.

மழையை நம்பிய செய்கை என்பதால், ஒரு போகமே செய்ய முடிகிறது. குழாய்க் கிணறுகளை நிர்மாணித்து கோடை காலத்திலும் செய்கையில் ஈடுபடவும் இவர்கள் விருப்பமாகத்தானுள்ளனர். சொந்தச் செலவில் இக்கிணறுகளை அமைக்கவும் இந்த விவசாயிகள் தயார்தான்.

ஆனால், குறுக்காக நிற்பது யானைப் பிரச்சினை தான். மாலை ஆறுமணியானால் இந்தப் பகுதிக்குள் படையெடுக்கும் யானைகள், அதிகாலை நான்கு மணி வரைக்கும் உணவு தேடி அலைவதாக இந்த விவசாயிகள் தெரிவிக்கின்றனர். வருடமொன்றுக்கு இரண்டு தொழிலாளிகளையாவது, இழந்து வருவதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பகுதியில் யானை வேலி அமைத்து தருமாறு, சகல தமிழ் எம்பிக்களையும் கேட்டாயிற்று. கொட்டாவி விடுவதைத் தவிர வேறு பலன்கள் இதுவரைக்கும் கிடைக்கவில்லையே என்று பெரிய ஏமாற்றத்துடன் மனந்திறந்தனர் பலர்.

வெறும் நிர்வாக எல்லைகளுக்காக குரல் கொடுக்கும் தமிழ் எம்பிக்கள், எங்கள் குழந்தைகளின் வயிறுகளுக்காக நாங்கள் உண்ணும் உணவுக்காக உரிமைக்குரல் எழுப்பக் கூடாதா என்பதும் இவர்களது விரக்தி கலந்த கேள்விகளாக இருக்கின்றன.

மக்கள் வாழாத மாநிலம் யாருக்குத் தேவை? நாங்கள் பிழைக்காத மண், யார் ஆள்வதற்கு? என்றெல்லாம் இரட்டைப் பொருளுடன் இந்த விவசாயிகள் கேட்ட கேள்விகள், நியாயத்துக்கான சாட்சிகளாக நிற்கத்தான் செய்கின்றன.

தென்னிலங்கைச் சந்தையில் அதிகம் விலை போகும் கச்சான், சோளம் போன்ற தங்களது சேனைப் பயிர்ச் செய்கையை ஊக்குவிக்க யானை வேலியை மட்டுமாவது அமைத்து தருமாறு மக்கள் பிரதிநிதிகளை இந்த விவசாயிகள் கோருகின்றனர்.

**நிப்ராஸ்**



# கசிப்பு

## கிழக்கை நிலை குலைக்கும் சட்டவிரோத செயல்பாடு

## அதிகரித்துச் செல்லும் கசிப்பு உற்பத்தியை நிறுத்த கனதியான செயற்பாடு தேவை

மனிதன் அல்லும் பகலும் உழைத்தாலும் அதனை பத்திரமாக சேமித்தலிலும், ஏனைய அன்றாடத் தேவைகளுக்கும் பயன்படுவத்துவது இன்றியமையாததாகும். ஆனாலும், தற்காலத்தில் வியாபித்திருக்கின்ற கொவிட்– 19 வைரசின் தாக்கத்தின் மத்தியில் நாட்டில் அவ்வப்போது பயணத்தடை, அமுல்படுத்தப்பட்டு வரப்படுகின்றன.



இந்நிலைமையை சாதகமாக பயன்படுத்திக் கொண்டு சிலர், மிகவும் சூட்சுமமான முறையில் சட்டவிரோதமாக கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றனர். இதை விடவும், ஏற்கனவே, பதுக்கி வைத்திருந்த மதுபான போத்தல்களை இக்காலப்பகுதியில் அதிக விலைக்கு விற்பனை செய்து வருவதும், அதிகரித்து ள்ளதையும் அவதானிக்க முடிகின்றது.

இவ்வாறான சட்டவிரோத செயல்களால், தனி மனிதன் மாத்திர மின்றி சமூகமே பெரிதும் பாதிப்புக்குள்ளாகி வருகின்றமை வேதனையான விடையமாகவுள்ளது. ‘‘தனிமனித மாற்றமே சமூக மாற்றம்’’ என்பதற்கிணங்க ஒவ்வொருவரும் தாமாக உணர்ந்து செயற்பட்டால் மாத்திரமே இவ்வாறான துர் செயற்பாடுகளை முற்றாகத் தடுத்து நிறுத்த முடியும்.

கசிப்பு காய்ச்சும் தொழிலில் ஈடுபட்ட நிலையில் கடந்த 12. 06. 2021 அன்று மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகனேரி பிரதேசத்தை சேர்ந்த இரண்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக, வாழைச்சேனை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தனஜய பெரமுன தெரிவித்தார்.

வாழைச்சேனைப் பகுதி புலனாய்வு அதிகாரிகளுக்கு கிடைத்த இரகசிய தகவலை யடுத்து, அவர்களுடன் வாழைச்சேனை பொலிஸாரும் இணைந்து, கிரான் பிரதேச செயலாளர் பிரிவில், தட்டாவெளி அக்கரானை பகுதியில் நடாத்திய சோதனையின் போதே, இந்த இரண்டு சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டதோடு, அவர்களிடம் இருந்து கசிப்பு காய்ச்சுவதற்காக பயன்படுத்தக் கூடிய கோடா 420 லீற்றரும் ஸ்பிரிட் 20 லீற்றரும் கைப்பற்றப்பட்டுள்ளன.



சந்தேக நபர்கள் 26 மற்றும் 20 வயதுடையவர்கள் என்றும் இவர்கள் கிரான் பிரதேச செயலாளர் பிரிவில் வாகனேரி பகுதியை சேர்ந்தவர்கள் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், திருகோணமலை மாவட்டத்தின் கிண்ணியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஈச்சந்தீவு பகுதியில் கசிப்பு உற்பத்தி நிலையமொன்று முற்றுகையிடப்பட்ட நிலையில், சந்தேகநபரொருவரை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர் அதே பகுதியைச் சேர்ந்த 31 வயதுடையவராவர்.

கிண்ணியா பொலிஸ் விசேட புலனாய்வு பிரிவினருக்கு வழங்கப்பட்ட இரகசிய தகவலையடுத்து கிண்ணியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமிந்த பெர்னாந்துவின் ஆலோசனைக்கு அமையக் கிண்ணியா பொலிஸார் கசிப்பு உற்பத்தி நிலையத்தினை சுற்றிவளைத்து சந்தேகநபரொருவரையும் கைது செய்து தடுப்புக்காவலில் வைத்து புலன் விசாரணைகளை மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அக்கசிப்பு உற்பத்தி நிலையத்தில் கசிப்பு மற்றும் கோடாத் திரவமும் அடங்கிய 7 பரல்கள் கைப்பற்றப்பட்டுள்ளதுடன், இவற்றில் சுமார் 3 இலட்சத்து 60 மில்லி லீற்றர் கசிப்பு இருந்ததாக மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

இது இவ்வாறு இருக்க, கரடியனாறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சின்னக்குளம் கிராமத்தில், வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையிலே, 500 மில்லி லீற்றர் எடையுள்ள 101 பியர் போத்தல்கள், கைப்பற்றப்பட்டன.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலொன்றின் அடிப்படையில், மேற்படி பியர் போத்தல்கள் கைப்பற்றப்பட்டதுடன், அங்கிருந்த பெண்ணும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இச்சந்தர்ப்பத்தில், மட்டக்களப்பு, கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முனைக்காடு காட்டுப் பகுதியிலும், அண்மையில் கசிப்பு உற்பத்தி நிலையம் பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டது.

இதன்போது, 6 பரல்களில் 10 இலட்சத்து 80,000 மில்லி லீற்றர் கோடா மீட்கப்பட்டு அழிக்கப்பட்டதுடன், 20,000 மில்லி லீற்றர் கசிப்பும் 2 கேஸ் சிலிண்டர்கள் உட்பட கசிப்பு உற்பத்தி செய்யும் உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த பயணக்கட்டுப்பாட்டுக் காலப்பகுதியில் அதிக விலைக்கு மதுபானங்களை விற்பனை செய்வதற்கென 3 வீடுகளில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த பெருமளவு மதுபான போத்தல்கள், மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

குற்ற விசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி பி. எஸ். டி. பண்டார தலைமையிலான பொலிஸ் குழுவினர், மாமாங்கம், கூழாவடி மற்றும் ஊறணி ஆகிய பகுதிகளில் சுற்றிவளைப்புகளை மேற்கொண்ட போதே, இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

இதன்போது, 180 மில்லி லீற்றர் கொள்ளவுள்ள 307 சாராய போத்தல்களும் 750 மில்லி லீற்றர் கொள்ளளவுள்ள 8 சாராய போத்தல்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இச்சந்தர்ப்பத்தில் மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கருவப்பங்கேணியில், கேரள கஞ்சா பக்கெட்டுகளுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது, இளைஞனிடமிருந்து 58 கேரளா கஞ்சா பக்கெட்டுகளும் 2,350 ரூபாய் பணமும் அலைபேசியொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளன.

விலை உயர்ந்த பியர் போத்தல்களை அனுமதிப் பத்திரமின்றி சட்டவிரோதமான முறையில் பதுக்கி வைத்திருந்த குற்றச்சாட்டில், பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பயணத்தடையைப் பயன்படுத்தி சட்டவிரோதமான முறையில் அதிவிசேட சாராய போத்தல்களைப் பதுக்கி வைத்து அதிக விலைக்கு விற்பனை செய்த ஒருவரை மட்டக்களப்பு குற்ற விசாரணைப் பிரிவினர் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அண்மையில் மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட, புதூர் சேத்துக்குடா பகுதியில் குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி. எஸ். பி. பண்டார தலைமையிலான பொலிஸ் குழுவினர் மேற்கொண்ட திடீர் சுற்றி வளைப்பின் போது 30 குறித்த சாராய போத்தல்கள் கைப்பற்றப்பட்டன. கைது செய்யப்பட்ட நபரும் சாராய போத்தல்களும் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படவுள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனை குற்றச்செயல் அதிகரித்துள்ளதாக மாவட்ட மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி தெரிவிதுள்ளார்.

இது குறித்து, மட்டக்களப்பு மாவட்ட மதுவரித் திணைக்களம் தொடர்ச்சியான சுற்றி வளைப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. மாவட்டத்தின் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வரப்படுகின்றன.



இதன்போது, வெல்லாவெளி பிரதேசத்தில் இருவரும் கிரான் மற்றும் வாழைச்சேனை ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் எண்மரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ள இந்நிலையில் அவர்களுக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

இந்த பொலிஸ் அறிக்கையை பார்க்கின்ற பொழுது, சட்டவிரோதமான கசிப்பு உற்பத்தியும் சாராய பதுக்கல் வியாபாரங்களும் கடுமையாக அதிகரித்திருப்பது, சமூகச் சீரழிவின் உச்சத்தை காட்டுகிறது.

பிள்ளையார் பிடிக்க போய் குரங்கான கதையாக முடிந்து விடும் போல் தான் தெரிகிறது. கொரோனாவை கட்டுப்படுத்த அரசாங்கம் கடுமையான செயல் திட்டங்களை முன்னெடுத்து, பயணக் கட்டுப்பாடுகளை விதித்த காலப் பகுதியில், இத்தகைய சமூக விரோத செயல்கள் அதிகரித்து இருப்பது கிழக்கின் எதிர் காலத்தை கேள்விக் குறியாக்கி இருக்கிறது.



[வ. சக்திவேல்]

# செயலணியை கலைக்குமாறு அரசாங்கத்துக்கு ஆலோசனை

ஞானசார தேரர் தலைமையிலான ஜனாதிபதி செயலணியை உடனடியாக கலைக்க வேண்டும் என்று அரசாங்கத்தை மாற்று கொள்கைகளுக்கான நிலையம் கோரி உள்ளது.

ஒரே நாடு ஒரே தேசத்துக்கான ஜனாதிபதி செயலணி ஞானசாரர் தலைமையில் நியமனம் செய்யப்பட்டு இருப்பது பேரதிர்ச்சியையும், மன வருத்தத்தையும் தந்து உள்ளது என்று இந்நிலையம் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டு உள்ளது.

ஒரே நாடு ஒரே சட்டம் என்பது இனவாத கோட்பாடு ஆகும், சட்டத்துக்கு முன் அனைவரும் சமம், சட்டத்தின் முன் அனைவருக்கும் சமமான பாதுகாப்பு என்று அரசியல்அமைப்பில்உறுதிப்படுத்தப்பட்டு உள்ள அடிப்படை உரிமைகளை இது அர்த்தம் அற்றதாக்கி விடும் என்றும் இவ்வறிக்கையில் சொல்லப்பட்டு உள்ளது.

தனியார்சட்டங்கள்அடங்கலாகஇலங்கை சட்ட முறைமையின் அம்சங்கள் பலவும் உள்நாட்டு அரசியல் அமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டு உள்ள அடிப்படை உரிமைகளுக்கு மாத்திரம்அன்றிசர்வதேசகடப்பாடுகளுக்கு ஏற்பானவையாக இல்லை என்றும் இதில் கூறப்பட்டு உள்ளது.

# மலேசிய கம்பனி மூலம் சேதன பசளை உற்பத்தி


இலங்கையில் சேதன பசளை உற்பத்தியில் ஈடுபடுவதற்கு முதலீடு மேற்கொள்ள மலேசிய நாட்டு கம்பனியான இனோ நேச்சர் முன்வந்து உள்ளது.

இனோ அதன் நாட்டில் சேதன பசளை உற்பத்திக்கு பெயர் பெற்றது. நவீன தொழினுட்பத்தை பயன்படுத்துகின்றது.

கம்பனியின் பிரதிநிதிகளுக்கும் விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேக்கும் இடையில் அமைச்சு அலுவலகத்தில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது.

இக்கம்பனி மூலமாக நாட்டுக்கு தேவையான சேதன பசளையை நவீன தொழினுட்பத்தை பயன்படுத்தி உற்பத்தி செய்ய கூடியதாக இருக்கும் என்று முகநூலில் அமைச்சர் பதிவேற்றி உள்ளார்.

# உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்: கைது செய்யப்பட்ட 64 பேருக்கும் 14 திகதி வரை விளக்கமறியல்



(கனகராசா சரவணன்)

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக காத்தான்குடி பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட ஸரானின் சகோதரி, சியோன்; தேவலாயதாக்குதலுடன்தொடர்புடையவர்கள் உட்பட 64 பேரையும் எதிர்வரும் 11 ம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் ஏ.சி.எம்.றிஸ்வான் காணொளி மூலமாக நேற்று வியாழக்கிழமை (28) திகதி உத்தரவிட்டார்.

கடந்த21.4.2019 உயிர்த்த ஞாயிறன்று இடம்பெற்ற தாக்குதலின் பின்னர்; ஸஹ்றான் குழுவோடு தொடர்புடையவர்கள் என்றும் இவர்கள் ஹம்பாந்தோட்டை மற்றும் நுவரேலியா போன்ற இடங்களுக்கு பயிற்சிக்காக சென்றார்கள் என்ற சந்தேகத்தின் காத்தான்குடியை சேர்ந்த 65 பேரை கைது செய்தனர்.

அதேவேளை ஸாரானின் சகோதரி மற்றும் அவரின் கணவர், உட்பட 4 பேரை மட்டக்களப்பு பொலிசார் கைது செய்தனர் இரு வெவ்வேறு வழக்குகளை கொண்ட 69 பேர் பேர் தொடர்ந்து விளக்கமறியல் வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் 5 பேர் வழக்கில் இருந்து விடுவித்து விடுவிக்கப்பட்ட நிலையில் தொடர்ந்து 64 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்த நிலையில் குறித்த வௌ;வேறு இரு வழக்கு இலக்கங்களை கொண்ட 64 பேரும் நாட்டிலுள்ள பொலன்னறுவை, அனுதாரபுரம், கேகாலை, திருகோணமலை, போன்ற சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டு தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்த நிலையில் நேற்று மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவன் ஏ.சி.எம். றிஸ்வான் முன்னிலையில் இந்த வழக்குகள் வழுக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது தற்போது தனிமைப்படுத்தப்பட்ட ஊரடங்கு சட்டம் காரணமாக நீதிமன்றிற்கு இவர்களை அழைத்துவர முடியாததையடுத்து அவர்களை காணொளி மூலமாக எதிர்வரும் 11 திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் ஏ.சி.எம்.றிஸ்வான உத்தரவிட்டார்.

# வெளிநாட்டு அமைச்சின் கொன்சியூலர் பிரிவின் விசேட அறிவித்தல்

வெளிவிவகார அமைச்சின் கொன்சியூலர் சேவைகளை பெறுவதற்கு வருகை தருகின்ற பொதுமக்கள் ஒன்லைனில் முன்கூட்டியே பதிவு மேற்கொண்டு அனுமதி பெற்றிருத்தல் அவசியம் என்று அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

கொன்சியூலர் பிரிவின் தலைமை அலுவலகம் கொழும்பிலும், பிராந்திய அலுவலகங்கள் மாத்தறை, யாழ்ப்பாணம், கண்டி, குருணாகல், திருகோணமலை ஆகியவற்றிலும் உள்ளன.

*http://consular.mfa.gov.lk/ONLINE-BOOKING* என்கிற முகவரிக்கு சென்று முன்பதிவு மேற்கொண்டு அனுமதி பெற்ற பிற்பாடே வருகை தர வேண்டும் என்று வெளிவிவகார அமைச்சு அறிவித்து உள்ளது.

இதன் மூலம் நேரத்தை வீணடிக்காமலும், நீண்ட வரிசையில் நிற்காமலும் சேவைகளை பொதுமக்கள் பெற்று கொள்ள கூடியதாக இருக்கும் என்று நம்பிக்கை தெரிவித்து உள்ளது.

இந்த அறிவுறுத்தலுக்கு அமைய அலுவலக நாட்களில் காலை 7.30 மணிக்கும் மதியம் 1.30 மணிக்கும் இடையில் ஆவணங்களை உறுதிப்படுத்தி பெற்று கொள்வதற்காக வருகை தர முடியும் என்று அறிவிக்கப்பட்டு உள்ளனர்.

கொன்சியூலர் பிரிவின் திருகோணமலை அலுவலகத்தை தொடர்பு கொள்ள விரும்புவோர் 026 2223186 என்கிற தொலைபேசி இலக்கத்துக்கு அழைப்பு மேற்கொண்டு மேலதிக தகவல்களை பெற்று கொள்ள முடியும்.

# பிரித்தானியா செல்பவர்களுக்கு முக்கிய அறிவிப்பு

கொரோனா தடுப்பூசிகளை முறையாக ஏற்றி கொண்ட இலங்கையர்கள் எதிர்வரும் நவம்பர் 01 ஆம் திகதி முதல் பிரித்தானியாவுக்கு பயணம் செய்ய முடியும் என்று இலங்கைக்கான பிரித்தானிய தூதரகம் அறிவித்து உள்ளது.

குறைந்தது பயணத்துக்கு 14 நாட்கள் முந்தியாவது முறையாக தடுப்பூசிகளை ஏற்றி இருத்தல் வேண்டும், அவை பிரித்தானியாவால் அங்கீகரிக்கப்பட்ட தடுப்பூசிகளாக இருக்க வேண்டும், தடுப்பூசிகள் ஏற்றி கொண்டமையை ஆவணங்கள் மூலம் நிரூபிக்க வேண்டும் என்று தூதரகம் அறிய தந்து உள்ளது.

இத்தேவைப்பாடுகளை பூர்த்தி செய்த பயணிகள் பிரித்தானியாவுக்கு பயணிப்பதற்கு முன்பாக 48 மணித்தியாலங்களுக்கு முன் விண்ணப்ப படிவம் ஒன்றை கட்டாயம் நிரப்பி கொடுக்க வேண்டும். அதே போல கொவிட் 19 பரிசோதனைக்கு உட்படுதலும் வேண்டும் என்றும்

பிரித்தானியாவை சென்றடைந்த பிற்பாடு வீட்டிலோ, தங்குமிடத்திலோ 10 நாட்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்படுவார்கள் என்றும் தூதரகம் அறிய தந்து உள்ளது.

## தோட்ட தொழிலாளர்...

காங்கிரஸின் உப தலைவரும், ஊவா மாகாண முன்னாள் முதலமைச்சருமான செந்தில் தொண்டமான், நேரடியாக ஜனாதிபதியின் கவனத்துக்கு கொண்டுவந்ததை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆளும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பங்காளி கட்சி தலைவர்களை அலரி மாளிகையில் வியாழக்கிழமை மாலை ஜனாதிபதி சந்தித்து பேசினார்.

இதன்போதே, வர்த்தமானியில் அவ்விதம் பிரகடனம் செய்யப்பட்டு உள்ளபோதிலும் நடைமுறையில் கம்பனிகளால் 1000 ரூபாய் நாள் சம்பளம் வழங்கப்படுவதில்லை என்று ஜனாதிபதிக்கு செந்தில் தொண்டமான் எடுத்துரைத்தார்.

இவர் கூறியவற்றை மிக கவனமாக செவிமடுத்த ஜனாதிபதி, 1000 ரூபாய் கொடுப்பனவை உடனடியாக அமுல்படுத்துமாறு தொழில் திணைக்களத்துக்கு அறிவுறுத்தினார்.

வர்த்தமானி அறிவுறுத்தலுக்கு அமைய தோட்டத் தொழிலாளர்களுக்கு 1000 ரூபா சம்பளம் இதுவரை முழுமையாக வழங்கப்படவில்லை. அதிகாரிகள் மட்டத்தில் இந்த ஆயிரம் ரூபாய் வழங்குவது இழுத்தடிக்கப்பட்டு வருகிறது.

இதுவரை,20 தொடக்கம் 30 வீதமான தொழிலாளர்களே தினமும் ஆயிரம் ரூபா சம்பளம் பெறுவதற்கு உரித்துடையவர்களாக இருக்கின்றார்கள். ஆகவே, இதில் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்வதாக, செந்தில் தொண்டமான் ஜனாதிபதியிடம் நேரடியாக கேட்டுக்கொண்டார்.

இது தொடர்பில், உரிய கடுமையான நடவடிக்கை எடுப்பதாக ஜனாதிபதி உறுதியளித்தார்.

## ஒரே நாடு, ஒரே சட்டம்...

விடயமாக இருக்கின்றபோது, இந்நாட்டின் இரண்டாவது பெரும்பான்மையினரான தமிழர்கள் உள்வாங்கப்படாத

செயலணி நிறுவப்பட்டது பாரதூரமான தவறும், தமிழ் மக்களை அவமதிக்கின்ற செயலும் ஆகும் என்பதாக இவர்களின் ஆட்சேபனைகள் அமைந்தன.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இவர்களின் ஆட்சேபனைகளை பொறுமையாக கவனத்துடன் செவிமடுத்தார். ஆயினும், செயலணிக்கு உறுப்பினர்களை நியமித்த தருணம் வரை தமிழ் பிரதிநிதித்துவம் கிடைக்கவே இல்லை என்று தெரிவித்தார்.

தமிழர் பிரதிநிதித்துவத்தை உள்ளீர்ப்பதற்கு ஏற்றவாறு செயலணியை விஸ்தரிப்பதற்கு தயார் என்று தெரிவித்த அவர், தமிழர் பிரதிநிதிகளை தெரிவு செய்து தருகின்ற பொறுப்பை டக்ளஸ் தேவானந்தா, செந்தில் தொண்டமான் ஆகியோரிடமே ஒப்படைத்தார்.

நாம் இது தொடர்பாக செந்தில் தொண்டமானை தொடர்பு கொண்டு பேசியபோது, வடக்கு, கிழக்கு, மலையகம் ஆகியவற்றை உள்ளடக்குகின்ற வகையில் 05 பிரதிநிதிகள் ஒரே நாடு ஒரே சட்டத்துக்கான ஜனாதிபதி செயலணிக்கு உள்ளீர்க்கப்பட வேண்டும் என்பது எமது விருப்பம் ஆகும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும், நானும் விரைந்து செயலில் இறங்கி உள்ளோம், இருவரும் உடனடியாக சந்தித்து உரிய நடவடிக்கைகளை எடுப்போம் என்றார்.

## பொறுப்பை முறையாக....

கூறுகையில், 'ஒரே நாடு, ஒரே சட்டம் என்று பார்க்கின்றபோது தமிழர்களுக்கு பிரத்தியேகமான பிரச்சினைகள் கிடையாது. ஆகவேதான் செயலணிக்கு தமிழ் உறுப்பினர்கள் நியமிக்கப்படவில்லை என்று நான் நம்புகின்றேன்' என்றார்.

# நீதி தேவதையாய் கோலோச்சிய கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி ஸ்ரீநிதி நந்தசேகரன்

## கல்முனையில் இன்று சேவை நலன் பாராட்டு விழா

கல்முனையின் நீதி தேவதையாய் கடந்த மூன்று வருடங்கள் கோலோச்சிய கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதி கௌரவ ஸ்ரீநிதி நந்தசேகரன் அவர்கள் தனது 20 வருட கால நீதிச் சேவையிலிருந்து 01.11.2021 அன்று ஓய்வு பெறுவதையிட்டு அவரைப் பாராட்டி கௌரவிக்கும் விழா கல்முனை சட்டத்தரணிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் 30.10.2021 ஆம் திகதி கல்முனையில் இடம்பெறுகிறது.



கொழும்பு மாநகரில் சட்டத்தரணியான பெரியார் செல்வராஜா மற்றும் ஆசிரியையான திருமதி வசஸ்பதி செல்வராஜா தம்பதியருக்குப் பிறந்த ஸ்ரீநிதி அம்மையார், தனது ஆரம்பக் கல்வியை மோதரையில் அமைந்துள்ள ஹம்ஸா முஸ்லிம் கல்லூரியில் பெற்றுக் கொண்டார். இங்கு அவரது தாயார் ஒரு ஆசிரியையாக கடமையாற்றினார். அப்பாடசாலையில் தரம் 5 வரை கல்வி கற்று தாயின் இடமாற்றத்தை அடுத்து மோதரை கதீட்றல் மகளிர் பாடசாலையில் பயின்றார். பின்பு இரத்மலான இந்து கல்லூரியில் உயர்தரம் வரை கல்வி கற்று கொழும்பு பல்கலைக்கழக சட்ட பீடத்திற்கு தெரிவானார்.

1983ஆம் ஆண்டு பல்கலைக்கழகம் நுழைந்த இவர் சட்டமாணியாக பட்டம் பெற்று, தந்தையின் வழியில் ஒரு சட்டத்தரணியாக 1992 ஆம் ஆண்டு சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இவருடன் சமகாலத்தில் சட்டத்தரணிகளாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டவர்களே மேல் நீதிமன்ற நீதிபதிகளான கௌரவ ஆ.இளஞ்செழியன் அவர்களும் கௌரவ அப்துல் மனாப் அவர்களும் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், ஸ்ரீநிதி அம்மையார் கொழும்புப் பல்கலைக் கழகத்தில் சர்வதேச வணிகச் சட்டம், சர்வதேச நடுத்தீர்ப்புச் சட்டம் மற்றும் வங்கியியல் மற்றும் நிதி நிறுவனங்கள் தொடர்பிலான சட்ட முதுமாணி பட்டத்தையும் பெற்றுள்ளார்கள். சட்டத்தரணியாக சத்தியப் பிரமாணம் செய்த பின்னர் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் சட்ட ஆலோசகராக பல வருடம் கடமை புரிந்தார். இலங்கையின் வங்கி ஊழியர்கள் சங்கத்தின் ஒரு அங்கத்தவராக இருந்த அவர்கள் சிங்கப்பூர் நாட்டில் நடைபெற்ற வங்கி ஊழியர்களுக்கான சர்வதேச மாநாட்டில் இலங்கையை பிரதிநிதித்துவப்படுத்தி கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

வங்கித்துறையில் சுமார் பத்து வருடங்கள் கடமையாற்றிய நீதிபதி ஸ்ரீநிதி அம்மையார் 2002.10.15 ஆம் திகதி நீதித்துறையில் காலடியெடுத்து வைத்தார். முதலாவது நியமனமாக வவுனியா நீதிமன்றத்தில் மாவட்ட நீதிபதியாகவும் நீதவானாகவும் கடமையாற்றினார். அதன் பின்னர் காங்கேசன்துறை, யாழ்ப்பாணம், கொழும்பு, பருத்தித்துறை, சாவகச்சேரி ஆகிய நீதிமன்றங்களில் நீதிபதியாக கடமையாற்றக் கிடைத்தது. யுத்த காலத்தில் வட மாகாணத்தில் மிகவும் சிரமங்களுக்கு மத்தியில் நீதியை நிலைநாட்டுவதற்கு பாடுபட்டார்.

அன்னாரது நீதித்துறை சேவைகளை கருத்திற் கொண்டு 2018ஆம் ஆண்டு மேல் நீதிமன்ற நீதிபதியாக பதவி உயர்த்தப்பட்டு, கல்முனை மேல் நீதிமன்ற நீதிபதியாக நியமிக்கப்பட்டார். கல்முனை, பொத்துவில், அக்கரைப்பற்று மற்றும் சம்மாந்துறையை உள்ளடக்கியுள்ள கல்முனை மேல் நீதிமன்ற வலயத்தின் குடியியல் மேன்முறையீட்டு நீதிபதியாகவும் செயற்பட்ட இவர் இப்பிரதேசத்தில் நீதி நிர்வாகத்தை செயல்படுத்துவதில் கால நேரம் பாராது பணியாற்றினார். அதனை என்றும் இப்பிரதேச மக்கள் நினைவு கூறுவர்.

இரக்க குணமும் தயாள சிந்தனையும் கொண்ட ஸ்ரீநிதி அம்மையார், நீதியை நிலைநாட்டுவதில் என்றும் அர்ப்பணிப்புடன் செயலாற்றினார். நீதிபதியாக பணியாற்றிய காலத்தில் நியூசிலாந்து, இந்தியா, நேபாளம் போன்ற நாடுகளில் இடம்பெற்ற பயிற்சி நெறிகளில் பங்குபற்றியுள்ளார்.

சந்தைப்படுத்தல் துறையில் பணியாற்றிய இராமையா நந்தசேகரன் அவர்களை 1996 இல் மணம் முடித்த நீதிபதி ஸ்ரீநிதி அம்மையார் மூன்று பிள்ளைகளின் தாயார். இவர்களுள் இரண்டு ஆண் பிள்ளைகள் பல்கலைக்கழக இறுதியாண்டில் கல்வி பயில்வதுடன் மகள் தற்போது உயர்தரத்தில் கல்வி பயில்கின்றார்.

இவரது துணிச்சலான பணிகளைப் பாராட்டி அமெரிக்க அரசாங்கத்தால் 2009ஆம் ஆண்டின் துணிச்சலான பெண் எனும் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார். கல்முனையில் பணியாற்றிய காலத்தில் சட்டத்தரணிகளுக்கு சிறந்த ஆலோசகராகவும் நல்லதோர் வழிகாட்டியாகவும் இவர் திகழ்ந்துள்ளார். ஓய்வின் பின் தனது சேவைகளை நாடி வருபவர்களுக்கு உதவ எண்ணியுள்ள கௌரவ ஸ்ரீநிதி நந்தசேகரன் அவரகள் தனது ஓய்வுக் காலத்தை குடும்ப சகிதம் தேக ஆரோக்கியத்துடன் மகிழ்ச்சியாக கழிக்க இறைவனை பிரார்த்திப்பதோடு அவர்களது சேவை மேலும் தொடர வாழ்த்துக்களை தெரிவிப்போமாக.



சட்டத்தரணி ஆரிகா காரியப்பர்
செயலாளர்,
கல்முனை சட்டத்தரணிகள் சங்கம்




மங்கையர் மகுடம்
ஜெனிதா மோகன்

அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் ஏற்பாட்டில் கடந்த 22 ஆம் திகதி கல்முனை கிறிஸ்டா இல்லத்தில் மாவட்ட மட்டக் கலந்துரையாடல் இடம்பெற்றது. இதன்போது 5 பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கிராமங்களில் உள்ள பிரச்சினைகள் குழு கலந்துரையாடல் மூலம் வெளிக்கொணரப்பட்டு தீர்வு நடவடிக்கைக்கான திட்டமிடல் இடம் பெற்றது.


இதில் அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் இணைப்பாளர் திருமதி கலைவாணி தயாபரன் அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் மாவட்ட மட்ட தலைவி தம்பிப்பிள்ளை புஸ்பவதி அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் மாவட்ட மட்ட செயலாளரும் காரைதீவு பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி ஜெனிதா பிரதீபன் மற்றும் அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பின் மாவட்ட மட்ட பொருளாளரும் கல்முனை வடக்குப் பிரதேச செயலக பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி டிலினா றொசைறொ ஆகியோர் தலைமையில் இடம்பெற்ற இக் கலந்துரையாடலில் கல்முனை நாவிதன்வெளி பொத்துவில் ஆலையடிவேம்பு திருக்கோவில் ஆகிய 5 பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட மாவட்ட மட்ட தலைவிகள் கலந்து கொண்டு தங்கள் பிரதேசத்தில் காணப்படும் பிரச்சினைகள் தொடர்பாக கலந்துரையாடினர்.

## ஒரு வருட கால தாதியர் பயிற்சி முடித்தவர்களுக்கு சான்றிதழ்



இலண்டனில் அமைந்துள்ள அம்பாறை மாவட்ட விபுலானந்தர் புனர்வாழ்வு அமைப்பினால் இலவசமாக நடத்தப்பட்ட ஒரு வருட கால உதவித் தாதியர் பயிற்சி நெறியினை முடித்து வெளியேறிய மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. குருக்கள்மடத்தில் அமைந்துள்ள அப்ரோ விபுலானந்தர் முதியோர் இல்லத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வின் போது போது எடுக்கப்பட்ட படங்கள்.

# பல்துறையில் கால்பதித்த இளம் எழுத்தாளர் சிவசோதிகா



யாழ்ப்பாணம் கொக்குவிலை பிறப்பிடமாகக் கொண்ட இளம் எழுத்தாளர் ரெத்தினேஸ்வரன் சிவசோதிகா ரெத்தினேஸ்வரன் சாந்தா தம்பதியினரின் ஒரே மகளான இவர் ஆரம்ப கல்வியை யாழ் கொக்குவில் இந்துக் ஆரம்ப பாடசாலையிலும் மேற்கல்வியை யாழ் கொக்குவில் இந்துக் கல்லூரியில் தொடர்ந்தார். அதன் பிற்பாடு *IDM Nations Campus* இல் கணினி பட்ட முன்கற்கை மற்றும் ஆங்கிலம் ஆகிய கற்கைநெறிகளை பூர்த்தி செய்துள்ளார்.

தேசிய மட்ட சதுரங்க வீராங்கனையான இவர் தற்போது யாழ் பாடசாலைகளில் சதுரங்கப் பயிற்றுவிப் பாளராகவும் மற்றும் *Softlogic Life Insurance* இல் நிதி ஆலோசகராகவும் பணியாற்றி வருகிறார்.



சிறுவயது முதலே இலக்கிய துறையில் ஆர்வம் காட்டிய இவர் பாடசாலை காலங்களில் நாடகம், கவிதை, விளையாட்டு ஆகியவற்றில் பன்முக ஆற்றல் கொண்டவராக காணப்பட்டதோடு தமிழ் தினப் போட்டிகளில் பங்குபற்றியுள்ளார். அத்துடன் 'புதிய ராமாயணம்' எனும் நாடகத் தொடரை இயற்றி அதை அரங்கேற்றம் செய்துள்ளார். அவுஸ்திரேலியா பழைய மாணவர் சங்கத்தால் சிறந்த வாசிப்பாளருக்கான விருதையும் பெற்றுளார்.

இவரது திறமைக்கான அங்கிகாரத்தை முதலாவதாக கண்டறிந்து யாழ் வரணி நதியோர நாணல் இலக்கிய அமைப்பு இவருக்கு புரட்சிக் கவி விருது வழங்கி கௌரவித்தது.

அதனைத் தொடர்ந்து தேடல் கலை இலக்கிய அமைப்பு தொடர்ச்சியாக இரு வருடங்கள் தேடல் கவி மற்றும் கவி நிலா ஆகிய விருதுகளை வழங்கியதோடு தேடல் ஆண்டு விழா மலரில் இவரின் கிராமிய கவிதையும் இடம்பெற்றது.

ஏறாவூரில் இயங்கி வரும் தேனீக்கள் இலக்கிய அமைப்பு கவித்தேனீ விருது வழங்கியதோடு தேனீக்கள் கவிதை தொகுப்பில் இவர் படைப்பையும் இணைத்துக் கொண்டது.

இந்தியாவில் கவிமலர் பைந்தமிழ் சங்கத்தால் நடைபெற்ற உலக சாதனை புத்தகத்தில் இவரின் கவியும் வெளியானதை தொடர்ந்து உலக சாதனை விருதையும் பெற்றுக் கொண்டார்.

சென்னையில் உள்ள கவியுலகப்பூஞ்சோலை குழுமத் தின் ஆண்டு விழாவில் பேரறிஞர் அண்ணா விருதும் இவருக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

யாழில் இயங்கும் வானொலிகளில் இவரின் கவிதை களும் ஒலிபரப்பாகியது டன் சுவிஸ் நாட்டில் இயங்கி வரும் *ITR FM* வானொலியின் இதயம் பேசட்டும் எனும் நிகழ் வில் இவரின் அறிமுகம் மற்றும் கவிதைகள் பற்றி ஒலிபரப்பப்பட்டது.

இவ்வாறு கலைத்துறை யில் வளர்ந்து வரும் இவர் முகநூல் பக்கங்களில் ஆகிஷா எனும் புனைப்பெ யரில் தனது படைப்புகளை வெளியிட்டு வருகிறார்.

மகளீருக்கான மாதர் சங் கத்தின் ரங்கோலி வரைதல் மற்றும் மாவட்ட ரீதியான யோகா போட்டிகளிலும் கலந்து கொண்டு வெற்றிச் சான்றிதழ்களை சுவீகரித்த இவர் தற்போது சென்ஜேன்ஸ் ஆம்புலன்ஸ் படையணியின் அங்கத்துவராகவும் கொக்குவில் பிரதேச இளைஞர் விவசாய அமைப்பின் உப செயலாளராகவும் மற்றும் தம் பிரதேச அறநெறி பாடசாலையின் பகுதி நேர கணினி ஆசிரியராகவும் பதவி வகித்து வருகிறார்.



தனது இவ் வளர்ச்சிக்கு தன் குடும்பத்தவர்கள் மற்றும் ஆசிரியர்கள் நண்பர்கள் உறுதுணையாக இருப்பதாகவும் இவர் கூடிய விரைவில் கவிதை நூலை வெளியிடுவதே தனது கனவு எனவும் கூறியுள்ளார்.

இளம் படைப்பாளி சிவசோதிகாவின் கனவுகள் நனவாக நல்வாழ்த்துகள்.

இளம் கலைஞர் அறிமுகம்
கு.கிலசன்

# மீண்டும் இலக்கிய வானில் கவிஞர் நழீம் ஹனீபா



அம்பாறையில் அமைந்துள்ள அழகிய ஊரான ஒலுவி லில் பிறந்து வளர்ந்த கவிஞர் நழீம் ஹனீபா ஒலுவில் அல் ஹம்றா தேசிய பாடசாலையில் கல்வியையும், பாலமுனை ஸஹ்வா அறபுக் கலாசாலையில் இஸ்லாமிய மார்க்கக் கல்வியையும் சிறப்பாகக் கற்றார்,

கல்வி பயிலும் காலங்களில் கட்டுரை, கவிதை, பேச்சு போன்ற துறைகளில் ஆர்வம் காட்டியதோடு, பல நிகழ்ச் சிகளில் கலந்து சிறப்பித்துள்ளார், தொழில் காரணமாக சுமார் 13 வருடங்கள் வெளிநாட்டில் இருந்ததனால் முற்றாக கலைத் தொடர்பு துண்டிக்கப்பட்டது.

எனினும் கலைத்தாகம் தணியாத காரணத்தால் கலை யுலகில் மீண்டும் பிரவேசித்துள்ளார்.

அண்மைக் காலமாக முக நூலில் தனியாகவும் முகநூல் குழுமங்களிலும் கவிதை கட்டுரை போன்று பல வடிவங்களில் இவரது எழுத் துப் பணி தொடர்கிறது, சில கவிதைகள் இலங்கை, இந்திய இதழ்களிலும் பிரசுரமாகியதோடு, பிறை எஃப் எம் வானொலியிலும் ஒலிபரப்பாகியுள்ளது,

புதுக்கவிதை, குறுங்கவி தை, கிராமியக் கவிதை ஹைக்கூ, தன்முனை, போன்ற பல்வேறு பிரிவு களிலும் கவி எழுதி வருகிறார்.

இன்னும் நூல் எதுவும் வெளிடவில்லை விரை வில் தனது கன்னிப்படைப்பை வெளியிடும் எதிர்பார்ப்போடு பயணிக்கிறார். இதுவரை அவர் எழுதிய ஹைக்கூ வெற்றிக் கவிதைகள் 150 சேமித்து வைத்துள் ளார். அவைகளைத் தொகுத்து ஆரம்ப நூலாக வெளியிட உத்தேசித்துள்ளார்.

தனது கலைப் பணி சிறக்க தட்டிக் கொடுத்து வாழ்த்துக்கள் கூறி ஆதரவு வழங்கும் அனைத்து நண்பர்களுக்கும், கவி குழுமங்களுக்கும், தென்னையும் நிர்வாகியாக இணைத்து கௌரவித்துள்ள சிந்தனைச் சிறகுகள், கடல் பறவைகள் கலை இலக்கிய மன்றத்திற்கும் உளமார்ந்த நன்றிகூறி மகிழ்கிறார்.

இவரது எதிர்பார்ப்புகள் இனிதே நிறைவேற வாழ்த்துக் கள்.



# கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் 'அரண்' சஞ்சிகை வெளியீடு

(ஏ. எல்.எம்.ஷினாஸ்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தினரால் 'அரண்' சஞ்சிகை வெளியீட்டு வைக்கப்பட்டது. இந்நிகழ்வு நேற்று (28. 10. 2021) பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர். குணசிங்கம் சுகுணன் தலைமையில் காலை, மாலை என இரு கட்டங்களாக இடம் பெற்றன.

இந்த வெளியீட்டு விழாவில் முன்னாள் கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எம். ரி. ஏ. நிசாம், பிரபல எழுத்தாளரும் விமர்சகருமான உமாவரதராஜன் ஆகியோர் கலந்து கொண்டு சஞ்சிகை பற்றி கருத்துரைத் தனர்.

சஞ்சிகையின் பிரதம ஆசிரியரும் பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டாக்டர் எம். பி. அப்துல் வாஜித் சஞ்சிகை வெளியீட்டு உரையை நிகழ்த்தினார்.

பொதுமக்களை பாதுகாக்கும் காவலரணாக சுகாதார தரப்பு காணப்படுகின்றது. எதிர் காலத்தில் பிராந்தியத்தில் உள்ள ஒவ்வொரு தனிமனிதனும் தடையின்றி தமது சுகாதார சேவைகளை பெற்றுக்கொள்ள வேண்டும். என்ற உன்னத நோக்கத்தில் இந்த 'அரண்' சஞ்சிகை காலாண்டுக்கு ஒருமுறை வெளி வரும் என வைத்திய பணிப்பாளர் இங்கு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் பிராந்திய வைத்தியசாலை களின் பொறுப்பு வைத்திய அதிகாரிகள், வைத்தியர்கள். சட்டத்தரணிகள், கல்வி மான்கள், அரச நிர்வாக அதிகாரிகள், எழுத் தாளர்கள், இலக்கிய ஆர்வலர்கள், புத்தி ஜீவிகள் சுகாதாரப் பிரிவினர் என பலரும் கலந்து கொண்டனர்.

20 ஆண்டு கால வரலாற்றைக் கொண்ட கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் சஞ்சிகை ஒன்று வெளியீட்டு வைக்கப்படுவது இதுவே முதல் தடவையாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.










## 'அரண்' பிராந்திய மக்களுக்கு அரணாக இருக்கும்

### எழுத்தாளர் உமா வரதராஜன்

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

**'அரண்'** சஞ்சிகை எமது பிராந்திய மக்களுக்கு அரணாக இருக்கும் என நான் நம்புகின்றேன் என்று பிரபல எழுத்தாளரும் விமர்சகருமான உமா வரதராஜன் தெரிவித்தார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவை கள் பணிப்பாளர் அலுவலகத்தினரால் **'அரண்'** சஞ்சிகை வெளியீட்டு வைக்கப் பட்டது. இந்நிகழ்வு நேற்று முன்தினம் (28. 10. 2021) பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர். குணசிங்கம் சுகுணன் தலைமையில் காலை, மாலை என இரு கட்டங்களாக இடம்பெற்றன

இதில் **'அரண்'** சஞ்சிகை குறித்து விமர்சன உரை நிகழ்த்தும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

எமது நாட்டிலும் நாட்டிற்கு வெளியிலும் பல்வேறு துறைசார் சஞ்சிகைகள் இன்று வெளிவருகின்றன. இவை நிறுவன ரீதியாக சமூக அமைப்புகள் ரீதியாக துறை சார்ந்த படைப்பிலக்கியங்களை வெளிக்கொண்டு வருகின்றன.

சமூக ஊடகங்களிலும் இவைகள் பற்றி பிரசுரிக்கப்படுகின்றன. இந்நிலையில் கல்முனை பிராந்திய சுகாதார சே வைகள் பணிப்பாளர் அலுவலகம் இந்த **'அரண்'** சஞ்சிகையை இன்று வெளியிட்டு வைக்கின்றது. **'அரண்'** பொருத்தமாக அமைந்து விட்டால் நாடு பகைவர்களிடத்தில் பாதுகாப்பு பெறும் என்பது சரித்திரம்.

மழை, நீர், காடு என்பன இயற்கை அரண் என்றும் கோட்டை, பெரும் மதில், அகழி போன்றவற்றை செயற்கை அரண் என்றும் நாம் அழைப்பதுண்டு. மனித குலத்தை அச்சுறுத்திய பல நோய்களை நவீன மருத்துவத்துடன் தான் நாம் வேரறுத்தோம்.

மானிட வரலாற்றில் மிக மோசமான நோய் ஒன்றை எதிர்த்து உலகமே போராடிக் கொண்டிருக்கும் இந்த பெரும் துயர் காலத்தில் நமக்கெல்லாம் அரணாக செயற்பட்ட இந்த பிராந்தியத்தின் சுகாதாரத் துறையினரை நாம் நன்றியுடன் நினைவு கூர வேண்டும்.

அவர்களுக்குத்தான் **'அரண்'** என நாமம் விட தகுதி உண்டு என்பதை அழுத்தம் திருத்தமாக நான் இங்கு கூற விரும்புகின்றேன்.




உலகளாவிய ரீதியில் சுமார் ஒன் றரை ஆண்டாக நிகழும் பெரும் தொற்று நோய்க்கு எதிரான போரில் அர்ப்பணிப் புடன் களத்தில் நின்ற சுகாதாரத்து றையினர் மற்றும் மருத்துவத் துறையினரி னதும் பணி மகத்தானது.

உலகெங்கும் ஒரு லட்சத்து 80 ஆயிரம் சுகாதார பணியாளர்கள் இந்த நோயினால் பலியாகி உள்ளார்கள் என்பது வெறும் அனுதாபத்துடன் நாம் கடந்து போகும் விடயமல்ல. உலகம் முழுவதும் இந்தக் கொடிய நோயினால் 3.45 மில்லியன் மக்கள் உயிரிழந்துள்ளனர்.

எனவே மக்ளுக்கு அரணாக நின்று இந்த நோயை ஒழிக்க இன்று வரை போராடும் சுகா தாரப் பணியாளர்களே இந்த இருண்ட காலத்தின் கடவுள்கள் என்று நான் சொல் வேன்.

இந்த நோய்த்தொற்றை தடுப்பதில் எமது பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் மற்றும் இங்கு கடமையாற்றும் மருத்து வர்கள் சுகாதாரத்துறை யினர் ஆகியோரின் அணியை எப்போ தும் பாராட்டுகின் றோம்.





களத்திலிருந்து பொதுமக்களை பாது காப்பதற்கு பல்வேறு பணிகளை தியாகத் துடன் மேற்கொண்டு வருகின்றார்கள்.

எதிர்காலத்தில் **'அரண்'** சஞ்சிகை மக்க ளுக்கு தமது சுகாதாரத்தை உறுதிப்படுத்து வதற்கும் பாதுகாத்துக் கொள்வதற்கும் பெரிதும் உதவியாக அமையும் இதற்கு உயிரூட்டிய அனைவரையும் நான் நினைவுகூர்ந்து பாராட்டுகிறேன்.

**'அரண்'** எமக்கு அரணாக அமையும் என நம்புகிறேன் என்று தெரிவித்தார்.

## கவிச்சுடர் அன்பு முகைதீன்



### வாரம் ஒரு படைப்பாளி

முகம்மது இப்றாஹீம் என்ற இயற்பெயரைக் கொண்ட இவர், அன்பு முகைதீன் என்ற பெயரில் இலக்கியரகள் மத்தியிலும், இலக்கிய உலகிலும் அறிமுகமானார். இவர் அம்பாறை மாவட்டம் கல்முனைக்குடியில் 20. 03. 1940 ஆம் ஆண்டு பிறந்தார்.

16. 09. 2003 ஆம் ஆண்டு இவர் இந்த பூவுலக வாழ்வை துறந்து மறைந்துள்ளார். இவர் தனது ஆரம்பக் கல்வியை கல்முனை சாஹிராக் கல்லூரியில் கற்றார். 1960 இல் கவிதை எழுதத் தொடங்கிய இவர் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கவிதைகளையும், 190 கட்டுரைகளை யும், சில சிறுகதைகளையும் எழுதியுள்ளார்.

இவரது முதலாவது படைப்பு 'கடமையின் கண்' என்ற ஆக்கம் 1960 இல் இலங்கையின் தேசிய பத்திரிகையான தினகரன் பத்திரிகையில் வெளிவந்தது.

இவர் பல நூல்களை எழுதியுள்ளார். குறிப்பாக 'நபி வாழ்வில் நடந்த கதைகள்', 'அண்ணல் நபி பிறந்தார்', 'மாந்தருக்கு வாழ்வளித்த மகான்' போன்ற கட்டுரை தொகுப்புகளையும், 'மாதுளம் முத்துகள்', 'புதுப்புனல்', 'உத்தம நபி வாழ்வில்', 'எழுவான் கதிர்கள்' முதலான கவிதை தொ-குப்புகளையும் வெளியிட்டுள்ளார்.

1960 இல் இலங்கை வானொலியின் முஸ்லிம் சேவையில் இணைந்து நாட்டார் காவியம், கவிநயம், மகரந்தம் முதலான நிகழ்வுகளை தொகுத்ததோடு, உரைகளையும் ஆற்றியுள்ளார்.

இவருக்கு 1987 ஆம் ஆண்டு பிரதேச அபிவிருத்தி அமைச்சினால் 'கவிச்சுடர்' விருது வழங்கப்பட்டுள்ளது. மேலும் இவர் 'கலாபூ ஷணம்', 'ஆளுநர் விருது' போன்ற விருது களையும் பெற்றுள்ளார். கவிஞர் அன்பு முகைதீன் அவர்களின் படைப்புகள் இலக்கிய உலகில் என்றும் பேசப்படும். வாழ்க அவர் பூக்கள் நாமம்.

கோவிலூர் செல்வராஜன்



# தமிழர் வழிபாடுகளும் சடங்குகளும்

தமிழர் வழிபாடுகளும் சடங்குகளும் எனும் தலைப்பில் ஈழத்தில் புகழ் பெற்ற கண்ணகை அம்மன் ஆலயங்களில் இம்முறை செட்டிநகர் கண்ணகை அம்மன் ஆலயம் மற்றும் காரைதீவு கண்ணகை அம்மன் ஆலயம் பற்றி சுருக்கமாக ஆராய்வோம்.

**‘கடல் சூழ இலங்கை கயபாகு வேந்தனும் எந் நாட்டாங்க இமய வரம்பனும் நன்னாட் செய்த நாளனி வேள்வியில் வந்தீகென்றே வணங்கினர். வேண்டத் தந்தேன் வரமென்று எழுந்தது ஒரு குரல்..’** என்ற பாடல் வரிக்கு அமைய அம்மன் பற்றிய ஆய்வு மூலம் சில வரலாறுகளை எமது சமூகம் தெளிவு படவே இந்த ஆய்வு.

போர்த்துக்கேயர் காலத்தில் கிறிஸ்தவ மதம் மேலோங்கி, கிறிஸ்தவ மதம் பரப்ப பட்ட வேளை போர்த்துக்கேயருடன் பெரு யுத்தம் புரிந்து விமல தர்மன் மட்டக் களப்பை தன்னமர்வாக அமர்த்தினான்.

இந்த வேளை, நாட்டாரும் நம்பிகளும் கந்தப்பரையும் தங்களையும் கண்ணகை அம்மன் விக்கிரகங்களையும் மட்டக்கஎப்பில் குடியேற என்னி ஏழு நாட்டார் குடும்பமும் ஏழு கண்ணகை அம்மன் விக்கிரகத்தையும் வைரவ விக்கிரகத்தையும் தயார் செய்து சிறிது ஓடத்தில் சங்க முத்து ‘நம்பி குடும்பம்’ கந்தப்பர் ஒடத்தில் வாவியால் மண்முனை நீரோடையில் வந்தனர்.

இவ்வாறு மண்முனைக் கடுக்காக வரும் போது பெருங்காற்றும் மழையும் ஏற்பட்டு படகு தத்தளித்தது. அந்த நேரம் சிரித்த தாகவும் கஸ்ட்டத்தின் மத்தியில் கரை ஒதுங்கிய இடமே கிரான்குளம் சிறாம்பியடி ஆகும்.

இந்த சந்தர்ப்பத்தில் விமல தர்மனால் கந்தப்பர் கொல்லபட்ட வேளை விமல தர்மன் கட்டளைக்கு அமைய அம்மன் விக்கிரகத்தை வந்து இறங்கிய கிரான் குளம் சிறாம்பியடி எனும் இடத்தில் ஒரு கோயிலையும் மற்றைய ஆறு விக்கிரகங்களை ஆறு ஊர்களில் கோயில் அமைக்க உத்தரவு இட்டான்.



அதற்கு அமைய முதல் விக்கிரகம் கொண்டுகிரான்குளத்தில்சிறாம்பியடியில் கொண்டுவரப்பட்ட ஏழு விக்கிரங்களில் முதல் கோயில் உருவாக்கப்பட்டது.

இந்த ஆலயம் அமைத்து பராமரித்தவர் தனிப்பட்ட ஒருவரே அவர் அறுமக் குட்டி போடியார் என்பவராகும். இந்த சந்தர்பத்தில் அம்மன் இந்த போடியாருக்கு கனவில் தோன்றி, ‘எனக்குப் பிள்ளைக் குரல் சகிக்க இயலாது; மஞ்சல் மாவிடிச் சத்தம் பொறுக்க முடியாது; வெப்பம் தாங்க முடியாது; தன்னை மருதச்சோலை சூழ்ந்த செட்டி நகரில் தன்னை வைத்து சடங்கு செய்யும்’ படி உத்தரவு இட்டார். அதற்கு அமைய உருவான ஆலயமே செட்டிநகர் கண்ணகை அம்மன் ஆலயம் ஆகும்.

அடுத்த காரைதீவு கண்ணகை அம்மன் ஆலய வரலாற்றை நோக்குமிடத்து, 500 வருடங்களுக்கு முன் காரேறு மூதூர் என்ற பெயர் வழக்கில் இருந்த போது இந்த அம்மன் ஆலயம் ஆரம்பிக்கபட்டது.

இந்த பெயர் காலப்போக்கில் காரைதீவு என மாற்றம் பெற்றது. இப்பகுதியை அரசாண்ட வன்னிய மன்னன் நிலபுலன்களை பார்வையிட வந்த போது அரசனின் யானை மயங்கி கீழே விழுந்ததாகவும் அப்போது கோயில் மணி ஒலிக்க இக்கோயிலின் மகிமையை அரசனுடன் வந்தவர்கள் எடுத்துரைக்க கோயிலில் பூசை செய்து கொண்டு இருந்த தேவந்தி என்ற பென் கோயிலின் தலவிருட்சமான



வேப்பிலை அரைத்து கொடுக்னூ யானை எழுந்ததாகவும் கர்ண பரம்பரை கதை உண்டு.


அதற்கு அமைவாக அரசன் ஆலயம் அமைத்து கொடுத்ததாகவும் அரசனின் மனைவிகளில் ஒருவரான பூங்கோதைக்கு கண் பார்வை இழந்த போது இந்த அம்மனை வழிபட்டு கண் பார்வை பெற்றதாகவும் கூறப்படுகிறது. ஆலயம் தொடர்பாகவும் கண்ணகை அம்மனின் வழக்குரை 7 நாள்கள் பாடப்பட்டு ஆலய சடங்கு நிறைவு பெறுகிறது.

**இனி வரும் அடுத்த பதிவில் கண்ணகை அம்மன் பத்ததிகளும் சடங்கு விதிமுறைகள் பற்றியும் ஆராய்வோம்.**

**ஸ்ரீராமஜெயம்**

யோ. துஸ்யந்தன்
ஆஞ்நேயர் ஆலயம்
கிரான்குளம்

# கேதார கௌரி விரதம்



தீர்க்க சுமங்கலியாக இருக்க கேதார கௌரி விரதம் இருக்கலாம். இதனால் கணவரின் ஆயுள் கூடும். மாங்கல்ய பலம் கிடைக்கும் என்பது ஐதீகம்.

கேதார கௌரி விரதம் என்பது சிவ பெருமானை நினைத்து ஆண்டு தோறும் கடைப்பிடிக்கப் படும் முக்கியமான விரதம் ஆகும். கேதார கௌரி விரதம் மேற்கொண்டே பார்வதி தேவி சிவபெருமானின் இடப் பாகத்தைப் பெற்றார்.

அதனால் இறைவன் அர்த்தநாதீஸ்வரர் ஆனார் என்று கூறப்படுகிறது.

சிவபெருமானைப் போற்றும் விரதங்கள். கார்த்திகை சோமவார விரதம், கார்த்திகை உமா மகேஸ்வர விரதம், மார்கழி திருவாதிரை விரதம், தை மாத சூல




விரதம், மாசி மாத மகா சிவராத்திரி விரதம், பங்குனி உத்திரத் திருக்கல்யாண விரதம், வைகாசி மாத அஷ்டமி ரிஷப விரதம் மற்றும் ஐப்பசி மாத கேதார கௌரி விரதம் ஆகிய எட்டு விரதங்களுமே மகா விரதங்கள் என்று போற்றப் படுவன.

இவற்றுள் கேதார கௌரி விரதம் மிகவும் முக்கிய மானது. இந்த வருடம் இந்த கேதார விரதம் சற்று முன்கூட்டியே ஆவணி மாதம் இறுதியில் வந்துள் ளது என்பது குறிப்பிடத் தக்கது.

# பிரான்ஸ் கடல் எல்லைக்குள் பிரிட்டிஷ் கப்பல் சிறைபிடிப்பு

## பதற்றத்தை தணிக்குமாறு ஐரோப்பிய யூனியன் நாடுகள் கோரிக்கை




பிரான்ஸின் கடல் எல்லைக்குள் நுழைந்த பிரிட்டனின் மீன்பிடிக் கப்பலை பிரான்ஸ் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

மீன் பிடித்தலுக்கான அனுமதிப்பத்திரம் இல்லாமல் கடல் எல்லைக்குள் நுழைந்தமைக்காக கடந்த புதன்கிழமை இந்தக் கப்பலைக் கைப்பற்றியதாகவும் பிரான்ஸ் அறிவித்துள்ளது.

இந்தச் சம்பவம், ஐரோப்பிய யூனியனின் ஒற்றுமைக்கு பங்கம் ஏற்படுமளவுக்கு வளராமல் தீர்த்து வைக்க உச்சக் கட்ட முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென ஐரோப்பிய யூனியன் தலைவர் விருப்பம் தெரிவித்துள்ளார்.

கப்பலைச் செலுத்திய மாலுமிக்கு எதிராகக் குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படவுள்ளது.

இந்த விவகாரம் சுமுகமாகத் தீர்க்கப்படாவிட்டால், பாரிய விளைவுகளை பிரான்ஸ் சந்திக்க நேரிடுமென பிரிட்டன் எச்சரித்துள்ளது.

மேலும், பிரிட்டனின் மீன்பிடிக் கப்பல்கள் சுதந்திரமாகச் செயற்பட பிரான்ஸ் அனுமதிக்க வேண்டும் என்றும் பிரிட்டன் கோரிக்கை விடுத்திருக்கிறது.

பிரான்ஸின், கடல் எல்லைக்குள் மீன் பிடிப்பதற்கான அனுமதிப் பத்திரம், கைப்பற்றப்பட்டுள்ள பிரிட்டனின் கப்பலில் இருக்கவில்லை என்றும் இது, 2020 உடன்படிக்கையை மீறுவதாக உள்ளதென்றும் பிரான்ஸ் தெரிவித்துள்ளது.

மேலும், ஐரோப்பிய யூனியனிலிருந்து 2021 ஜனவரி 31 இல் வெளியேறியதால், பிரான்ஸின் கடல் பிராந்தியத்துக்குள் நுழையும் அதிகாரம் வறிதாகி உள்ளதாகவும் பிரான்ஸ் அறிவித்துள்ளது.

# ஆபிரிக்க யூனியனிலிருந்து சூடான் அரசு இடைநிறுத்தம்





ஆபிரிக்க யூனியன் அமைப்பிலிருந்து சூடான் இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இராணுவப் புரட்சி மூலம் அந்நாட்டு அரசாங்கத்தை கவிழ்த்து, பிரதமரை வீட்டுக் காவலில் வைத்துள்ள இராணுவ அரசாங்கத்தை கண்டிக்கும் வகையில், ஆபிரிக்க யூனியன் இந்த தீர்மானத்தை எடுத்துள்ளது.

ஏற்கனவே, இணக்கம் காணப்பட்டபடி 2023 இல் தேர்தல் நடத்தப்படும் வரைக்கும் அரசாங்கத்தை மீள ஒப்படைக்கும் வரை, இந்த இடைநிறுத்தம் தொடருமென்றும் ஆபிரிக்க யூனியன் அறிவித்துள்ளது. இந்நிலையில், வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ள பிரதமர் அப்துல்லா ஹம்டான் விடுதலையாகியுமுள்ளார்.

கடந்த சில தினங்களாக சூடானில் அரசுக்கு ஆதரவாகவும், இராணுவத்துக்கு ஆதரவாகவும் இருவேறு ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. இதனையடுத்து இராணுவம் அரசாங்கத்தை கவிழ்த்து ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது.

# உள்ளூராட்சி தேர்தலை நடத்துமாறு தென்னாபிரிக்க அரசுக்கு உத்தரவு



உள்ளூராட்சி தேர்தல்களை எதிர்வரும் திங்கட்கிழமை நடத்துமாறு, தென்னாபிரிக்க உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொவிட் காரணங்களைக் காட்டி இந்த தேர்தலை நடத்தாமல், அந்நாட்டின் தேர்தல் திணைக்களம் இழுத்தடித்து வந்தது.

இது தொடர்பான ஆட்சேபனை மனுவை சமூக செயற்பாட்டாளர்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்தனர். இந்த மனுவை ஆராய்ந்த நீதிமன்றம் எதிர்வரும் திங்கட்கிழமை உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்தும் படி உத்தரவிட்டுள்ளது. இந்தத் தேர்தல், ஆளும் தென்னாபிரிக்க காங்கிரஸுக்கு பெரும் சவாலாக அமையுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

# பிரித்தானியாவில் கொட்டித்தீர்க்கும் மழை: மூழ்கிய வீடுகள்... பரிதவிக்கும் மக்கள்!

பிரித்தானியாவில் மேலும் ஐந்து நாட்களுக்கு பெருமழை நீடிக்கும் என்றே வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

கொட்டித் தீர்த்த கனமழையால் வீடுகள் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளதையடுத்து நூற்றுக்கணக்கானோர் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

பெருமழை தொடர்ந்து நீடித்துவரும் நிலையில், ஸ்கொட்லாந்த் எல்லைப் பகுதிகள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டன. மற்றும் டம்ஃப்ரைஸ் அருகே இரண்டு சாலைப் பாலங்கள் அடித்துச் செல்லப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

வெள்ளம் சூழ்ந்த வீடுகளில் இருந்து மக்கள் பத்திரமாக வெளியேற்றப்பட்டுள்ளனர்.

மேலும் சாலைகள், ரயில் இணைப்புகள் முடங்கியுள்ளதால் போக்குவரத்தில் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

# எதியோப்பிய இராணுவத்தினரின் வான் தாக்குதலில் ஆறுபேர் பலி



எதியோப்பிய இராணுவம் நடத்திய வான்தாக்குதலில் ஆறுபேர் உயிரிழந்ததுடன், 26 பேர் காயமடைந்தனர்.அரசுக்கு எதிராகப் போராடும் 'ரிக்ரே' பயங்கரவாத அமைப்பினரின் இலக்குகளை நோக்கி இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது.

எதியோப்பிய அரசுக்கு எதிராகப் போராடும் இந்த அமைப்பு,இரகசிய இடங்களில் ஆயுதங்களை உற்பத்தி செய்து வருகிறது. இந்த இடங்களிலே வான் தாக்குதலை நடத்தியதாக அறிவித்துள்ள எதியோப்பிய அரசு, உயிரிழந்தோர் அனைவரும் பயங்கரவாதிகள் என்றும் அறிவித்துள்ளது.

அரசாங்கத்தின் இந்தக் கூற்றை நிராகரித்த போராளிகள்,அப்பாவி சிவிலியன்கள் மீது வான் தாக்குதல் நடத்திய இராணுவம், சிவிலியன்களைக் கொன்றுள்ளதாகக் குற்றஞ்சாட் டியுள்ளனர்.

# ஐரோப்பிய நாடுகளின் பத்து தூதுவர்கள் துருக்கியில் இருந்து வெளியேற்றம்



ஐரோப்பிய நாடுகளின் பத்து தூதுவர்களை வெளியேறுமாறு துருக்கிய ஜனாதிபதி ரிசப்தையிப் எடோர்கன் உத்தரவிட்டுள்ளார்.

இவர்களில் ஏழுபேர் நேட்டோ அமைப்பின் தூதுவர்களாவர். இவ்வாறு, இவர்கள் வெளியேற்றப்பட்டால், ஐரோப்பாவுடனான துருக்கியின் உறவு விரிசலுக்கு உள்ளாகலாம்.

துருக்கியில் சிறை வைக்கப்பட்டுள்ள ஒஸ்மான் குவைஸ் என்ற சமூக செயற்பாட்டாளரை விடுதலை செய்யுமாறு, இந்த நாடுகளின் தூதுவர்கள் அழுத்தம் கொடுத்ததாலே, இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்நபர், 2013 இல் அரசுக்கு எதிராக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்துக்கு நிதி உதவி வழங்கியதற்காகவும், 2016 இல் அரசைக் கவிழ்ப்பதற்கு சதி செய்வதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டு 2019 இல் சிறையிலடைக்கப்பட்டார்.